இதோ வந்துவிட்டது
இயற்கையின் வரதெட்சணை
ஆனந்தம் சீயாக்காய் பவுடர்
பாவித்து பயன் பெறுங்கள்
[சி-380]

பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சித்த மருத்துவ நிபுணரின் ஆலோசனையின் படி தயாரிக்கப் பெற்ற
ஆனந்தம் சீயாக்காய் பவுடர்
கிடைக்குமிடம்:
சண்டிலிப்பாய் மத்தி, விநாயகர் களஞ்சியம், இருபாலை, துளசி களஞ்சியம், கோப்பாய் நியு ராசா களஞ்சியம், நீர்வேலி பவானி களஞ்சியம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 18 வியாழக்கிழமை (02 – 03 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 98

# தலைவர் பிரபாகரனின் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா!

## பிரபாவின் கடிதத்துக்கு கொழும்பில் முக்கியத்துவம்

கொழும்பு, மார்ச். 2

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுச்கு அனுப்பிய பிந்திய கடிதம் நேற்றைய கொழும்புப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டிருந்தன.

''ஐலண்ட்'', 'லங்காதீப', 'திவயின' உட்பட மற்றும் பல பத்திரிகைகளில் இந்தக் கடிதத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது.

செய்தி ஏஜென்ஸிகளும் இந்தக் கடிதத்துக்கு முக்கியத்துவம் அளித்து செய்தி வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-3]

## 15 பொலீஸாரும், சிப்பாயும் சாகும்வரை உண்ணாவிரத போராட்டம் ஆரம்பம்

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள 15 ஸ்ரீலங்கா பொலீஸாரும், ஒரு இராணுவச் சிப்பாயும் திட்டமிட்டபடி நேற்றுக்காலை 8மணிக்கு சாகும் வரையான தமது உண்ணா விரதப்போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் இவர்கள் தமது உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். [ஒ-3]

## கொழும்பில் படம் எடுக்கும் தமிழர் தொடர்ந்து கைது!

கொழும்பு, மார்ச். 2

கொழும்பில் பொது இடங்களில் படம் எடுக்கும் தமிழர்கள் கைது செய்யப் படுவது தொடர்வதாக அறிவிக்கப் படுகிறது.

சில தினங்களுக்குமுன் கொழும்பு காலிமுகத் திடலில் படமெடுத்துக் கொண்டிருந்த தமிழ் தம்பதியினர் இருவரை கொழும்புக் கோட்டைப் பொலிசார் கைது செய்து விசாரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கட்டுநாயக்கா விமான நிலையத்தையும் அயற் பகுதிகளையும் வீடியோ படம் எடுத்த இரண்டு தமிழர்களையும் பொலிசார் கைது செய்திருக்கின்றனர்.

கைதான இருவரில் ஒருவர் 66 வயதுடைய வயோதிபர். மற்றவருக்கு வயது 28 என்று தெரிவிக்கப் பட்டது.

கடந்த மாதத்திலும் இவ்வாறு பல தமிழர்கள் கைது செய்யப் பட்டது தெரிந்ததே. (உ-6)

## நரோமா கப்பல் சேவை ஞாயிறன்று நடக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 2

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் 'நரோமா' கப்பல் சேவை ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கிறது.

அங்கிருந்து சனிக்கிழமை மாலை புறப்படும் இக்கப்பல் மறுநாள் காலை பருத்தித்துறையை அடைந்து அன்று மாலையே திரும்பும்

கப்பலில் செல்ல ஆசனம் பதிய விரும்புவோர் இன்று தமது பணத்தை செலுத்துமாறும் —

கடந்த 27 ஆம் திகதி கப்பலில் செல்வதற்காக ஆசனங்களைப் பதிவு செய்தவர்கள் இக்கப்பலில் செல்ல தமது பயணத்தை உறுதிப்படுத்துமாறும் —

மேலதிக அரச அதிபர் திருமதி பத்மினியம்மா திலகநாயகம் போல் கேட்டுள்ளார்.

அடுத்த கப்பல் சேவை எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. (ஒ-3)

## மலையக மக்கள் முன்னணி அரசியல் கட்சியாக பதிவு

### தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச். 2

''மலையக மக்கள் முன்னணி'' புதிய அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள இந்தக் கட்சியுடன் சேர்த்து நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 32 ஆக உயர்வடைந்துள்ளது.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் அல்லது உள்ளூராட்சித் தேர்தல் ஆகியவற்றை நடத்துவதற்கு வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்டு அந்தந்தத் தேர்தல்கள் நடைபெற்று முடியும் வரை வேறு எந்த புதிய கட்சிகளும் பதிவு செய்யப்பட மாட்டா.

தேர்தல் எதுவும் வர்த்தமானி மூலம் அறிவிக்கப் படாத சமயத்தில் வருடத்தின் எந்தக் காலத்திலும் புதிய கட்சியை பதிவு செய்து கொள்ளலாம்.

இதன்படி முன்பு கிடைக்குப் பெற்ற விண்ணப்பங்களில் நிராகரிக்கப்பட்டவை தவிர்ந்த ஏனைய விண்ணப்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று விண்ணப்பங்கள் கடந்த ஜனவரி முதல் வாரத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இம்மூன்று விண்ணப்பங்களில் இருந்தும் ''மலையக மக்கள் முன்னணி'' கட்சி மட்டுமே அரசியல் கட்சியாக தேர்தல் ஆணையாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-5)

## சமாதான முயற்சிகளில் தமக்கு நம்பிக்கை இருப்பதாகவும் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 2

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் கடந்த வார இறுதியில் தமக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ள குற்றச் சாட்டுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்திருக்கிறார்.

எனினும் சமாதான முயற்சிகளில் தமக்கு தொடர்ந்து நம்பிக்கை இருப்பதாக அவர் சொன்னார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்டு வரும் தவறுகளை, தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் தமது பிந்திய கடிதத்தில் விலாவாரியாகச் சுட்டிக்காட்டியிருந்தது தெரிந்ததே.

அந்த விடயங்கள் குறித்து நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் செய்தியாளர்கள் பலர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கேள்வி எழுப்பினர்.

பொது நிறுவன சீரமைப்பு ஆணைக்குழுவின் தொடக்க விழாவின் போது இந்த பத்திரிகையாளர் மாநாடு இடம் பெற்றது.

திரு. பிரபாகரன் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல விஷயங்கள் தவறானவை என்று ஜனாதிபதி அப்போது கூறினார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் இதுவரை மொத்தம் 34 கடிதப் பரிமாறல்கள் இடம்பெற்றதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி சந்திரிகா—

பொதுமக்களின் அபிப்பிராயம் தங்களுக்கு எதிராகத் திரும்புவதைத் தடுக்கவே 32 கடிதப் பரிமாறல்களும் இருக்கத்தக்கதாக கடைசி இரண்டு கடிதங்களை மட்டும் புலிகள் பகிரங்கப் படுத்தியி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## 2நாட்களில் புலிகளுக்கு சந்திரிகாவின் பதில்!

தலைவர் பிரபாகரன் கடந்த வாரஇறுதியில் தமக்கு எழுதிய கடிதத்துக்கு இரண்டு தினங்களில் தாம் பதில் அனுப்பவிருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவருக்கு அனுப்பும் பதிலின் இறுதி வடிவத்தை செம்மைப் படுத்துவதில் தான் இன்னமும் முனைந்திருப்பதாகவும்—

இரண்டு நாட்களில் அந்தப் பதில் கடிதம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப் படும் என்றும்—

அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (உ-க-6-7)

## தப்பிச் சென்ற புலிப் போராளிகள் பாண்டிச்சேரிக்குள் ஊடுருவ முயற்சி

### ஆந்திர எல்லையில் பொலீஸ் குழு

சென்னை, மார்ச்சு 2

சென்னை மத்திய சிறையில் தப்பிச் சென்ற புலிப் போராளிகள் எனக் கூறப்படுவோர் தற்போழுது ஆந்திர பிரதேசத்தின் ஊடாக, பாண்டிச்சேரி ஏனாம் என்ற இடத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதை அடுத்து ஆந்திரப் பிரதேச காவல்துறையினர் முழு அளவில் உஷார் படுத்தப்பட்டுள்ளதாகவும் ஏனாம் பகுதிக்குச் செல்லும் ரயில் வழிப் பாதைகளும் நீர்வழிப் பாதைகளும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காவல்துறை உயர் அதிகாரியான தேவாரம் தலைமையில் சுமார் நூறு பொலீஸார் ஆந்திர எல்லையில் விழிப்புடன் காத்திருப்பதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சில முக்கிய தடயங்கள் தமக்கு கிடைத்திருப்பதாகவும் —

இன்றைய தினத்துக்குள் இவர்கள் பிடிபட்டு விடுவார்கள் என்றும் —

சென்னைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

புலிகள் சந்தேக நபர்கள்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி செயலகத்திலிருந்து இரத்தினக்கல் மாயமான சம்பவம்: ஹேமாவுக்கு எதிராக விசாரணை?

கொழும்பு, மார்ச். 2

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலிருந்து விலை மதிப்பற்ற இரத்தினக் கல் காணாமல் போன சம்பவம் பற்றி பூரண விசாரணை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சம்பவத்துக்குப் பொறுப்பானவர் எத்தகைய தராதரத்தை உடையவராக இருப்பினும் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பணிப்புரை வழங்கப்படும் என்று கலாசார சமய விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி கூறினார்.

தமது அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு பற்றி குழுநிலை விவாதத்தை முடித்து பதிலுரை ஆற்றியபோது அவர் இவ்வாறு கூறினார்.

இரத்தினக்கல் [illegible] போன விடயம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணை சம்பந்தமாக அதிகாரிகளுக்கு இடையில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துப் பற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் அவற்றின் பிரதிகளையும் சபையில் சமர்ப்பித்தார்.

அவற்றில் ஒரு கடிதத்திலிருந்து மேற்கோள் காட்டிய முன்னாள் அமைச்சர், ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் பாரியார் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை விட்டு வெளியேறியதோடு இரத்தினக்கல் காணாமல் போன சம்பவம் தொடர்பாக பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்ததாகக் குறிப்பிட்டார்.

இந்த இரத்தினக்கல் வைக்கப்பட்டிருந்த வெள்ளிப் பேழை திருமதி ஹேமா பிரேமதாஸாவின்படுக்கை அறைக்குச் செல்லும் வாயிலில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அக்கடிதங்களில் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. (உ-எ-3)

[முன் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்]

முச்சந்தி முரளி



அப்ப...... கமராவோடை [illegible] குற்றம் என்டு சொல் [illegible]

## வெளிநாட்டு தூதுவர் குழு அடுத்த வாரம் யாழ். வரும்

யாழ்ப்பாணம், மார்ச். 2

கொழும்பில் தூதுவர்கள் அந்தஸ்தில் பணியாற்றும் 11 மேற்கு நாடுகளைச் சேர்ந்த ராஜதந்திரிகளைக் கொண்ட குழு எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்து சேரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வர விருக்கும் இக் குழுவில் பிரான்ஸ், நெதர்லாந்து, ஜேர்மனி, சுவீடன், பின்லாந்து, கனடா, ஜப்பான் அமெரிக்கா, ஆவுஸ்திரேலியா, பிரிட்டன், நோர்வே ஆகிய 11நாடுகளின் சார்பில் கொழும்பில் பணியாற்றும் தூதுவர்கள் இடம்பெற்றுள்ளனர்.

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி மேரி பேர்கின்ஸ் இத்தூதுக்குழு வினரை விமான மூலம் பலாலிக்கு அழைத்து வருவார். [ஒ-3]

## 6,000 பரல் ம. எண்ணெய் முகவர்களுக்கு வந்து சேரும்

### கோமாரியில் எடுத்துவர ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச். 2

யாழ் மாவட்டத்தில் உள்ள பொற்றோலியக் கூட்டுத்தாபன முகவர்கள் இணைந்து 'கோமாரி' கப்பல் மூலம் 6 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயை எடுத்துவர விருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள 30க்கும் மேற்பட்ட முகவர்களில் 12 முகவர்கள் இம்முறை மண்எண்ணெய் எடுத்துவர விருக்கின்றனர்.

தற்சமயம் திருகோணமலையில் மா ஏற்றிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல் கொழும்பு சென்று, மண்எண்ணெயை ஏற்றிவர இருக்கிறது.

பெரும்பாலும் இக்கப்பல் இம்மாத நடுப்பகுதிக்கு முன்னர் வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை — 'மாஹோ' கப்பலும் நிவாரணத்துக்கான மண்எண்ணெயை தொடர்ந்து எடுத்து வரும் பணியில் ஈடுபடும்.

## மட்டு. வெல்லாவெளியில் பகிரங்க இராணுவ ஒத்திகை

மட்டக்களப்பு, மார்ச் 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெல்லாவெளி 40 ஆம் கிராமப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பகிரங்க இராணுவ ஒத்திகையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் பீதியடைந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 22 ஆம் திகதியன்று மட்டக்களப்பு கொம்மாந்துறையில் மக்களை ஏற்றிவந்த வாகனச் சாரதி ஒருவரும், நடத்துநரும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் தாக்கப்பட்டுள்ளனர். இதேபோல் பல இடங்களில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பல கெடுபிடிகளை மேற்கொள்கின்றனர்.

சோதனைச் சாவடிகளில் இராணுவத்தினருடன் அவர்கள் சார்பானவர்களும் சோதனை என்ற பெயரில் கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-7)

## கடற்படையை பலமாக்கும் நடவடிக்கை தீவிரம்

### ஆட்சேர்ப்பதிலும் முனைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 2

ஸ்ரீலங்கா கடற்படையினர் தம்மைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதற்காக கடற்படைக் கப்பல்களை கொள்வனவு செய்வதிலும் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளிலும் முனைப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

சிங்கள இளைஞர்களை கடற்படையில் சேருமாறு ஸ்ரீலங்கா கடற்படை வேண்டுகோள் விடுத்துள்ளது. கடற்படை சிப்பாய்கள், கடற்படை விநியோகத் துருப்புக்கள், இலத்திரனியல், எந்திரவியல் துருப்புக்கள் இவற்றிற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை கடற்படை மேற்கொண்டுள்ளது.

அண்மையில் கடற்படைக்கான புதிய படகுகள், கப்பல்கள் போன்றவை ஸ்ரீலங்கா அரசினால் கொள்வனவு செய்யப்பட்டன. அத்துடன் அந்தமான் கடற்பகுதியில் கடற்படையினர் கூட்டுப்பயிற்சி ஒன்றையும் மேற்கொண்டுள்ளனர்.

புதிதாக கடற்படையில் சேர்பவர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியும் அதிக சம்பளமும் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-7]

## இந்திய அரசிடம் நஷ்டஈடு கோருகிறார் தமிழறிஞர் வேலுப்பிள்ளை

சென்னை, மார்ச் 2

கடந்த ஜனவரியில் தஞ்சாவூரில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது, தஞ்சாவூரிலிருந்து பலவந்தமாக நாடு கடத்தப்பட்ட ஈழத் தமிழ் அறிஞரும் சுவீடன் பல்கலைக்கழகப் பேராசிரியருமான திரு. ஆ. வேலுப்பிள்ளை தமக்கு இழைக்கப்பட்ட அநியாயத்துக்கு இந்திய அரசிடம் நஷ்டஈடு கோரியிருக்கிறார்.

நஷ்டஈடாக பெரும் தொகைப் பணத்தைக் கோர

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொக்குவில் நந்தாவில்
கற்புலத்து மனோன்மணி அம்பாள்
இந்து சமய அபிவிருத்திச் சங்கம்

## வாழ்த்துகின்றோம்

''சிவாகம கிரியா தத்துவநிதி'' என்னும் சிறப்புப் பட்டத்தைப்பெறும் எமது ஆலய பிரதம குருக்கள்
சிவஸ்ரீ மு. ஜெயந்திநாதக்குருக்கள்
சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்
(பிரதமகுரு துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் தெல்லியூர்)
சிவஸ்ரீ சாமி சுந்தரேசக் குருக்கள்
(பிரதமகுரு பெருமாள் கோவில் வண்ணை, தாவடி)
ஆகியோருக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்து சமய அபிவிருத்திச் சங்கம்
கொக்குவில்.

(35459)


பஸ்சேவையை ஆரம்பிக்க வசதியாக

# கதிரவெளி படையினரின் வீதித் தடைகளை அகற்றுக

## எம். பிக்கள் கோரிக்கை

மட்டக்களப்பு—மூதூர் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக கதிரவெளியில் இராணுவம் போட்டுள்ள வீதித் தடையை அகற்ற வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட எம்.பிக்கள் இக் கோரிக்கையை விடுத்தனர்.

அக்கூட்டத்தில் கலந்து கொண்ட மாவட்ட பாதுகாப்பு இணைப்பு அதிகாரி, தாம் இது தொடர்பாக கதிரவெளி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியுடன் கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இது போன்று—

வவுணதீவு — கொக்கட்டிச்சோலை பஸ் சேவையை நடத்துவதற்கு வசதியாக வவுணதீவு வீதியில் இராணுவம் போட்டுள்ள தடையை அகற்ற வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் வானொலியில்

02 — 03 — 1995
வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்த மருத்துவ குறிப்புகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் ''தண்ணீரை சேமிக்க வேணும்'' குறு நாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 —மொழியும் வாழ்வும்
★ 8-50 —தாயகப் பாடல்கள்

03 - 03 — 1995
வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
வியாழன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சித் தேம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும் — நிலாமகன் எழுதிய ''வாசலெங்கும் வேதனையின் கோடு''
6-00 — சிந்தனைக்கு சில வினாடிகள்
★ 6-02 — பொன் விளையும் பூமி — நிகழ்ச்சியில் ''எங்கட மண்'' நாடகம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — கேள்வி பதில்— விளையாட்டுத் தொடர் பானவை
★ 6-25 — என் தெரிவு
★ 6-30 —மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்


கொக்குவில் நந்தாவில் கற்புலத்து
மனோன்மணி அம்பாள் ஆலயம்

## வாழ்த்துகின்றோம்

26-02-1995 (மாசிமாதம் 14ம் திகதி) ஞாயிற்றுக் கிழமை எமது ஆலய பிரதம குருக்கள்.
சிவஸ்ரீ. மு. ஜெயந்திநாதக்குருக்கள்
(சிவாகமகிரியா சிரோன்மணி) அவர்களுக்கும்
சிவஸ்ரீ. இ. சுந்தரரேசக் குருக்கள்
[பிரதாகுரு துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் தெல்லியூர்]
சிவஸ்ரீ. சாமி சுந்தரரேசக் குருக்கள்
(பிரதமகுரு பெருமாள் கோயில்வண்ணை, தாவடி)
ஆகியோருக்கும்''சிவாகமகிரியாதத்துவநிதி'

என்னும் சிறப்புப்பட்டம் அளித்துக் கௌரவிக்கப்பட்டதை பெருமையுடன் வாழ்த்து கின்றோம். மேன்மைக்குரிய சிறப்புப்பட்டத்தை அளித்துக் கௌரவித்தமைக்காக இணுவில் காயத்திரி பீடம் தர்மசாஸ்தா குருகுலத்திற்கும் குருகுல முதல்வர் சிவஸ்ரீதா மகாதேவாக்குருக்கள் அவர்கட்கும் எமது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஆலய பரிபாலனசபையினர்
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்
(35460)



## கண்ணீர் அஞ்சலி

யாழ். தொழில் நுட்பக்கல்லூரி CE iii (94) மாணவன்

### S. அம்பிகைபாலன்

அவர்கள் சிவபதம் அடைந்துவிட்டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகிறோம்
அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கிறோம்.
(அனைத்து பொறியியல் பிரிவு மாணவர்களும் காலை 9.00மணிக்கு கல்லூரிக்கு வருகை தரவும்.)

பொறியியல் மாணவர் மன்றம்,
யாழ் தொழில்நுட்பக் கல்லூரி.
(35461)



## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா ஐயாத்துரை

எமது கல்லூரி ஆசிரியை திருமதி. க. நடராசா அவர்களின் தந்தை திரு கந்தையா ஐயாத்துரை அவர்களின் மறைவு குறித்து எமது ஆசிரியர் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலிக்கிறோம்.

ஆசிரியர் கழகத்தினரும்.
சிற்றூழியரும், மாணவரும்.
யா/ யூனியன் கல்லூரி.
தெல்லிப்பழை.
[8264]



## இசைக்கச்சேரி

சண்டிலிப்பாய்
ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார்
தேவஸ்தானத்தில்

நாளை 03 - 03 - 95 (வெள்ளி] திருதியை தின விழாவில் குல தெய்வ வழிபாடாக] இசைக்கச்சேரி

அபிஷேகம் மாலை: 4. 00 மணி
பூஜை சுவாமியுலா 5. 00 மணி:
சொற்பொழிவு 7. 00 மணி:
பண்டிதர். திரு. இராஜதுரை அவர்கள்
இசைச்சமர்ப்பணம் 7. 30 மணி:

பாட்டு:
சோமாஸ்கந்த குருக்கள் உமாரமணசர்மா

பக்கவாத்தியங்கள்
வயலின்: இசைஞான பூபதி R S. கேசவமூர்த்தி
மிருதங்கம்: இசைக்கலைமணி K. கண்ணதாசன்
கடம்: வித்துவான் சதாவேல்மாறன்
மோர்சிங்: S ரவிச்சந்திரன்
கஞ்சிரா S சாரங்கன்

இங்ஙனம்
உபயகாரர்கள்

நா. சர்வேஸ்வரக்குருக்கள்
[35463]



# அகில இலங்கைக் கம்பன் கழகம்

யாழ். ஈஸ்வரபகவான் நிறுவன
ஆதரவில் நடத்தும்

அமரர்கள்
வித்துவான் சி. ஆறுமுகம் தேவன்-யாழ்ப்பாணம் வித்துவான் சி. குமாரசாமி
ஆகியோர் ஞாபகார்த்த

## கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகள் - 1995





வித்துவான் சி. ஆறுமுகம் தேவன் – யாழ்ப்பாணம் வித்துவான் சி. குமாரசாமி

— எமது கழகத்தால் நடத்தப்படவுள்ள மேற்படிபோட்டிகளுக்குத் தகுதியானவர்கள் கீழே காட்டப்பட்டவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கலாம்.
— ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் போட்டியாளர்க்கு இவ்வாண்டுக் கம்பன் விழாவில் தங்கப் பதக்கங்கள் பரிசில்களாக வழங்கப்படும். அத்தோடு அவர்கள் தகுதி கண்டு கம்பன் விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் வழங்கப்படும்.
— போட்டியாளர் ஒரு விண்ணப்பப் படிவத்தில் ஒரு போட்டிக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
— உடன் தரப்படும் தலைப்பில் பேசவும், கவிதையாக்கவும், கட்டுரையாக்கவும் கூடிய 30 வயதுக்குட்பட்ட [1965 - 03 - 31] க்குப் பின் பிறந்த இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
— கழகத்தால் எடுக்கப்படும், போட்டி பற்றிய முடிவுகள் அனைத்துக்கும் போட்டியாளர் கட்டுப்பட்டவராவார்.
— விண்ணப்ப உறையின் இடதுபக்க மேல் மூலையில் கலந்து கொள்ளும் போட்டிபற்றித் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
— உரிய முறையில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
— விண்ணப்ப முடிவு திகதி: 1995 மார்ச் 15
— விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

போட்டி இணைப்பாளர்,
அகில இலங்கைக் கம்பன் கழகம்,
''கம்பன் கோட்டம்'', 300, கோயில வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ..........
2. வதிவிட முகவரி: ..........
3. பிறந்த திகதி: ..........
4. பால்: ..........
5. மாணவராயின் பாடசாலையின் பெயர்: ..........
கல்வி பயிலும் தரம்: ..........
6. தொழில் செய்பவராயின் தற்போதைய தொழில்: ..........
அலுவலக முகவரி: ..........
7. கலை இலக்கியத் துறைகளில் விசேட தகைமைகள்: ..........
8. பங்குபற்ற விரும்பும் போட்டி: பேச்சு/கவிதை/கட்டுரை

..........
விண்ணப்பதாரியின் கையொப்பம்

..........
திகதி

''கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்''

தி. திருநந்தகுமார் — தலைவர்
ஆறு. திருமுருகன் — போட்டி இணைப்பாளர்
க. குமாரதாசன் — செயலர்



மருத்துவ, விஞ்ஞான, வர்த்தக, முகாமைத்துவ, கணனி விஞ்ஞானத்துறைகளில் அண்மையில் வெளியாகிய நூல்களும் அவற்றின் E-L-B-S பதிப்புக்களும், ஆங்கில அகராதிகள். ஆங்கில - தமிழ் அகராதிகள். ஆங்கில தமிழ் சிறுவர் நூல்கள், பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை பாடநூல்கள் நியாயவிலையில் கிடைக்கும்.

✶ மொத்தக் கொள்வனவுக்கு விசேட கழிவு வழங்கப்படும் ✶

# யாழ்ப்பாண புத்தக நிலையம்

448, கிட்டுச்சாலை,
(வைத்தியசாலை முன்)
யாழ்ப்பாணம்.
(சி/399)



# வீடியோ, புகைப்பட படப்பிடிப்பாளர்கள்

உங்கள் மங்கள நிகழ்வுகளை அழகுக்கு அழகூட்டி
என்றும் அழியாத ஓவியமாய்
தரமான படப்பிடிப்பு செய்வதற்கு

## என்றும் நினைவில் நிறுத்திடுங்கள்

ஆம்!!

★ அதிநவீன மிக்ஸர்கள் மூலம் நேரடி வீடியோ படப்பிடிப்புக்கும்,
★ ஸ்ருடியோ ஒழுங்கமைப்பிலான ஸ்ரில் படப்பிடிப்பு மிக்சிங்குடன் செய்வதற்கும்,
★ வர்ணப்பட பிரதியாக்கத்தினை (Colour Printing and Developing) குறைந்த காலத்தில் நிறைந்த திருப்தியுடன் பெற்றுக்கொள்வதற்கும்,
★ இத்துறை சார்ந்த பொருள்களை நியாயவிலையில் பெற்றுக்கொள்வதற்கும்,
★ கலர்/கறுப்பு வெள்ளை ஸ்ருடியோ படப்பிடிப்புக்கும் (பாஸ்போட், அடையாள அட்டை, படம் பெரிதாக்கல்)
★ ஒருமுறை விஜயம் செய்யுங்கள். தொடரும் உங்கள் தேவை எங்கள் சேவையாகவே இருக்கும்.

## ஒளிப்பட கலையகம்
K.'S. R. PHOTOS

இல. 766, காங்கேசன்துறை வீதி,
தட்டாதெருச் சந்தி,
யாழ்ப்பாணம்.

### தலைமை அலுவலகம்

இல. 12A, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
(சி/709)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ. தே. கட்சியில் மீண்டும் செயற்படுவார் குரே!

கொழும்பு, மார்ச். 2

ஐ.தே.கட்சியின் முன்னாள் அமைச்சரும் அக்கட்சியின் முக்கியஸ்தராக விளங்கியவருமான திரு. சிறிசேன குரே மீண்டும் அரசியலில் பிரவேசித்துள்ளார்.

சிறிசேன குரே மீண்டும் ஐ.தே.கவில் இணைந்து சேவை புரிய உள்ளதாக கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். அவரின் சேவையையும் ரணில் பாராட்டியுள்ளார்.

டி.பி விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவருக்கும் குரேக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-6)

### தகவல் துறைக்கு பொறுப்பான

# சிரேஷ்ட உதவிச் செயலர் பதவியை ஒழிக்க முடிவு

கொழும்பு, மார்ச் 2

சகல அமைச்சுக்களிலும் தகவல்துறைக்கு பொறுப்பாக உள்ள சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவிகளை ஒழிப்பது என்று அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இத்தீர்மானத்தை எதிர்த்து' தொழில் அமைச்சில் தகவல் துறைக்குப் பொறுப்பான சிரேஷ்ட உதவிச் செயலாளரான பத்திரிகையாளர் யு. பி. தென்னக்கூன் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றைத்தாக்கல் செய்துள்ளார். (இ-எ)

# சிறந்த பெறுபேறுபெற்ற பாடசாலைக்குப் பாராட்டு

அச்சுவேலி, மார்ச் 2

அண்மைக்காலத்தில் வளவசதிகள் குறைந்த கிராமப் பாடசாலைகள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவதாக மதிப் பீடுகளின்படி அறியவருகின்றது.

கடந்த வருடம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, முதல்நிலைத்தேர்வு [5 ஆம் ஆண்டு] இளநிலைத் தேர்வு 8 ஆம் ஆண்டு ஆகியவற்றின் பெறுபேறுகளில் கோப்பாய்க் கல்விக்கோட்டத்தில் உள்ள 43 பாடசாலைகளில் கரந்தன் இராமுப் பிள்ளை வித்தியாசாலை முன்னணியில் உள்ளது.

சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட வளவசதிகள் குறைந்த இவ்வித்தியாசாலையின் வளர்ச்சியைக் கல்வி அதிகாரிகள் பாராட்டியுள்ளனர். [க-11]

# தலைமன்னார் தமிழர் மீது கடற்படையினர் கெடுபிடி

ஸ்ரீலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பிலுள்ள தலைமன்னார்ப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் கடற்படையினரின் கெடுபிடிகளுக்கு உள்ளாகிவருகிறார்கள்.

கடற்படையினர் தமது முகாம் வேலைகளுக்கென தமிழ் மக்களை ஈடுபடுத்தி வருகின்றனர் என்றும் வேலை செய்ய மறுப்பவர்கள் கடுமையாகத் தாக்கப்படுகிறார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

போர் இடைநிறுத்தம் அமுலுக்கு வந்தபின்னரும் கூட ஸ்ரீலங்காக் கடற்படையினரின் அடாவடித் தனங்கள் குறையவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ-7)

# சமாதான தீர்வு முயற்சிக்கு சீன அரசும் பாராட்டு

''இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண இலங்கை அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை சீன அரசாங்கமும் பாராட்டியுள்ளது''

சீனாவுக்குச் சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் சீன அதிகாரிகள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

சமாதானத்தைக் காணும் முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் சாதகமான முறையில் ஒத்துழைப்பு வழங்குவர் என்றும் சீனா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ஒ-5-3)

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பிரச்சினைகள்

### தீர்த்து வைக்கப்பட்டன

வலிகாமம் தெற்கு, மார்ச் 2

உடுவில் கல்விக் கோட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் இட ஒதுக்கீடுகள் சம்பந்தமாக நிலவி வந்த குறைபாடுகள் சீர் செய்யப்பட்டுள்ளன.

உடுவில் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சு இரத்தினராசா இப்பகுதி பாடசாலைகளில் நியமனம் பெற்ற பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நேரடியாகச் சந்தித்து அவர்களின் நியமனம் சம்பந்தமான குறைவு நிறைவுகளை கேட்டறிந்தார்.

அதன் பின் ஒவ்வொரு ஆசிரியரினதும் விருப்பத்துக்கேற்ப அவர்கள் கோரிய பாடசாலைக்கு நியமனம் வழங்கி அவர்களின் குறைகளை சீர்செய்துள்ளார். [இ-5-152]

# கலை இலக்கிய கருத்தரங்கு முதல் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும், வெளிச்சம் இதழும்இணைந்து ஏற்பாடு செய்துள்ள, 'கலை, இலக்கிய கருத்தரங்கு-1995' நாளை 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வுகள் நல்லூரில் அமைந்துள்ள நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில், காலை 9 மணி முதல் மாலை 4-30மணி வரை நடைபெறும்.

திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) தலைமையில் நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சிகளில் —

திரு. சி. கருணாகரன் வரவேற்புரையையும், தமிழீழ அரசியற்றுறை பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் தொடக்கவுரையையும், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி. நா. சுப்பிரமணியன் முதலுரையையும் நிகழ்த்துவார்கள்.

நண்பகல் 11 மணி தொடக்கம் 12-15 மணி வரை நடைபெறும் கருத்தரங்கில் திரு. செம்பியன் செல்வன் 'வாழ்வியலுடன் இணைந்த நாவல்கள்' எனும் பொருளில் உரை நிகழ்த்த, திரு. இணுவையூர் சிதம்பரதிருச்செந்தி நாதன் கருத்துரை வழங்குவார்.

திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் 'வாழ்வியலுடன் இணைந்த அரங்கியல்' எனும் பொருளில் உரை நிகழ்த்த. திரு. த. கலாமணி கருத்துரை வழங்குவார்.

பிற்பகல் 2-30 மணிக்கு திரு. மு. இராதாகிருஸ்ணன் (கோபாலி) 'வாழ்வியலுடன் இணைந்த ஓவியங்கள்' என்ற பொருளிலான உரையும் திரு. தி. தயானந்தம் (தயா) கருத்துரையையும் வழங்குவார்கள்.

மாலை 3-40 முதல் 4-30 மணி வரை திருமதி கோகிலா மகேந்திரனின் 'தமிழர் பாரம்பரியமும் பண்பாட்டு மாற்றங்களும்' என்ற உரையும், அதன் பின் கலந்துரையாடலும் இடம்பெறும்.

# அரச ஊழியரின் சுதந்திரத்துக்கு புதிய அரசமைப்பில் பல சரத்துக்கள்

கொழும்பு, மார்ச். 2

அரசாங்க ஊழியர்கள் அரசியல் வாதிகளின் செல்வாக்குக்கு கட்டுப்படாது சுதந்திரமாக தங்கள் கடமைகளை நிறைவேற்றக் கூடியதாக புதிய அரசமைப்பில் பல சரத்துகள் சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சரும் பிரதி நிதி அமைச்சருமான பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் முன் கண்ட தகவலை வெளியிட்டிருக்கிறார்.

தற்போது பொதுச் சேவைகள் ஆணைக்குழு அமைச்சரவையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. அரச நியமனங்களைச் செய்வது, பதவி உயர்வுகளை வழங்குவது, நியாயமான முறையில் இடமாற்றத்திட்டங்களை வகுப்பது, ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகளை நடத்துவது போன்றவற்றை இந்த ஆணைக் குழு தான் மேற்கொண்டு வருகிறது.

புதிய அரசமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கும் ஷரத்துகளின் படி ஆணைக் குழுவின் நடவடிக்கைகளில் அரசியல் செல்வாக்கை பிரயோகிப்பது தவறான நடவடிக்கையாக கருதப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இனிமேல் ஆணைக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களை அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் குழு ஒன்றே நியமிக்கும்' என்றும் அவர் கூறினார். [ஐ-எ]

### பாதைஅமைப்பு

அராலி மேற்கு புங்கங்குளி நல்ஒளி சனசமூக நிலைய உறுப்பினர்கள் கிராம மக்களின் போக்குவரவுக்காக அரை மைல் தூர 3 அடிப் பாதையை சிரமதானம் மூலம் அமைத்துள்ளனர். (க-168)

# திருடப்பட்ட பொருள்களை காவல்துறை கைப்பற்றியது

தென்மராட்சி, மார்ச் 2

பூநகரி கௌதாரிமுனைப் பகுதியில் இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் இருந்து திருடப்பட்ட 50ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் தனங்கிளப்புப் பகுதி வீடொன்றில் சாவகச்சேரி காவல் துறையினரால் கடந்தவாரம் கைப்பற்றப்பட்டன.

பொதுமக்கள் கொடுத்த தகவலைத் தொடர்ந்து காவல் துறையினர் இப்பகுதியை சுற்றிவளைத்து சோதனையிட்டனர். அப்பொழுது இரண்டு மீன்பிடிப் படகு இயந்திரங்கள், வீட்டுக்கதவுகள்-ஜன்னல்கள். நிலைகள், முட்கம்பிகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் ஆகியவற்றை அவர்கள் கைப்பற்றினார்கள்.

இத் திருட்டுத் தொடர்பாக நால்வரைக் கைது செய்து காவல்துறையினர் விசாரணை செய்து வருகின்றனர். (க-117)

# பாப்பரசரின் பாதுகாப்புக்கு உதவாத சுப்ப சொனிக் போர் விமானங்கள்

பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கடந்த மாதம் கொழும்புக்கு விஜயம் செய்த போது, அவர் பயணம் செய்த விமானத்துக்கு இலங்கை விமானப் படையின் சுப்பர் சோனிக் சீன போர் விமானங்களை துணையாக அனுப்ப அரசு விரும்பியதாகவும் —

ஆனால் சீன விமானங்களில் ஒழுங்கான ராடர் வழிகாட்டும் சாதனங்கள் பொருத்தப்பட்டிருக்காததால் அவ்விருப்பம் நிறைவேறாது போயிற்றுஎன்றும் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இதனால் இலங்கை விமானப்படைக்கு ஏமாற்றம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

சுப்பர் சோனிக் சீன போர் விமானங்களை பாதுகாப்புக்கு அனுப்புவது குறித்த அரசின் விருப்பத்தை சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் திருமதி நிருபமா ராஜபக்ஷ விமானப் படைத் தலைமைக்குத் தெரிவித்திருந்தார்,

பாப்பரசரின் விமானத்துடன் மோதாத முறையில் பாதுகாப்பான தூரத்தில் துணையாகச் செல்வதற்கு வேண்டிய வான் வழிகாட்டுதலை] ராடர் மூலம் வழங்க முடியாத நிலையில் தாங்கள் இருப்பதாக விமானப் போக்குவரத்துக் கண்காணிப்பாளர்கள் பிரதி அமைச்சருக்கு தெரிவித்தனர்என்று ''சண்டே ரைம்ஸ்'' தகவல் வெளியிட்டது. (இ-எ)

# ஓய்வூதிய வவுச்சர்களை இங்கு தயாரிக்க சம்மேளனம் கோரும்

யாழ்ப்பாணம், மார்ச். 2

வடபகுதி ஓய்வூதியர்களுக்கான வவுச்சர்களை யாழ். செயலகத்திலேயே அந்தந்தப் பகுதி செயலகங்கள் மூலம் தயார்படுத்தி, கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்படி வடமாநில ஓய்வூதியர் சம்மேளனம் அரச அதிபரை கேட்கவுள்ளது.

இது தொடர்பான தீர்மானம் இம்மாதம் 4 ஆம் திகதி நடைபெறும் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ளதாக, அதன் செயலர் பி. எஸ் திருச்செல்வம் தெரிவித்துள்ளார்.

சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் காலை 9-30 மணிக்கு யாழ். நல்லூர் சாதனா பாடசாலையில் தலைவர் திரு. சி. வி. கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில், இச்சம்மேளனத்தில் இணைந்துள்ள 14 ஓய்வூதியர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் அண்மையில் ஓய்வூதியர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளின் அதிகரிப்புகள், நிலுவைகள், எதிர்கால நடவடிக்கைகள் என்பன பற்றியும் ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5]

### பொதுத்தேர்தல் காலத்தில்

# இராணுவ சதிப் புரட்சிக்கு அதிகாரிகள் திட்டமிட்டனர்!

### புலன் விசாரணைகள் மூலம் தகவல்

கொழும்பு, மார்ச். 2

கடந்த ஒகஸ்ட் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கக் கூடிய அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால், மாற்று தலைமைத்துவத்தை அமைப்பது குறித்து இராணுவ அதிகாரிகள் குழு ஒன்று கொழும்பில் கூடி ஆராய்ந்ததாம். புலன் விசாரணைகளிலிருந்து இத் தகவல் வெளியாகியுள்ளது.

தேர்தலுக்கு முன்னர் இக் கூட்டம் நடத்தப்பட்டதாகவும்—

தேர்தலுக்குப் பின்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும், ஐ தே. கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால் இராணுவச் சதிப் புரட்சி மூலம் மாற்றுத் தலைமைத்துவத்தை ஏற்படுத்தும் நடைமுறைகளை ஆராய்வதற்கு இவர்கள் கூடினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முயற்சியில் ஈடுபட்ட இராணுவ உயர் அதிகாரிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

இது குறித்து விசாரிப்பதற்கு விசேட குழு ஒன்றை அமர்த்தியுள்ளதாக புலன் விசாரணைகளுக்கு பொறுப்பாக இருக்கும் இரகசியப் பொலீஸ் பிரிவு, பிரதிப் பொலீஸ்மா அதிபர் திரு. ரி. வி. சுமணசேகர அறிவித்துள்ளார்.

கொழும்பில் தற்பாழுது தங்கியுள்ள முன்னாள் இராஜ தந்திரி ஒருவரும் இந்தச் சதிப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றியதாக சொல்லப்படுகிறது.

கடந்த அரசாங்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்த இரு சிவில் உயர் அதிகாரிகளின் பெயரும் இதில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. (உ-7)

# ஆசிரிய இடமாற்றங்கள் இடமாற்றச்சபை மூலம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 2

''இனி வரும் காலங்களில், ஆசிரியர்களின் இடமாற்றங்கள் யாவும் ஆசிரியர் இடமாற்றச் சபையினூடாகவே செய்யப்படும்; இதனை ஆசிரியர் தொழிற்சங்கங்களும் வரவேற்றுள்ளன.

இவ்வாறு கல்வி, உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன, [illegible] தேசப் பாடசாலை [illegible] அண்மையில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகளுக்கான ஆசிரிய நியமனங்கள் இனிமேல் கல்வி அமைச்சினூடாக நேரடியாக வழங்கப்படும்; எனினும் ஏனைய பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனங்கள் மாவட்ட கல்விக் காரியாலயத்தினூடாகவே இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-5)

# இலவச சைக்கிள்பம்ப் சேதம்

சைக்கிள் பாவனையாளர்களின் நலன் கருதி யாழ். மிட்ரவுண் றோட்டறக்ற் கழகத்தால் யாழ். தட்டா தெருச்சந்தியில் பொருத்தப்பட்ட இலவச சைக்கிள் காற்றுப்பம்ப் சில விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

முக்கியமாக, இரவு சைக்கிள் பயணிகள், சைக்கிள் விறகு வியாபாரிகள், தொலை தூர சைக்கிள் பயணிகள் ஆகியோரின் நன்மை கருதியே மேற்படி கழகம் பிரதான சந்திகளின் ஓரங்களில் சைக்கிள் காற்றுப் பம்புகளைப் பொருத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### ஆண்டு 5 புலமைப் பரிசில்:

# மாதிரி வினாத்தாள் இங்கு மாத இறுதியில் வரும்!

புதிய அமைப்பில் தயாரிக்கப்படவிருக்கும் ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் மாதிரி வடிவம் இந்த மாத முடிவில் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் என பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னர் இப்பரீட்சையில் கணிதம், மொழி ஆகிய வினாத்தாள்கள் இருந்தன. அதற்குப் பதிலாக இனிமேல் முதலாவது வினாத்தாள், இரண்டாவது வினாத்தாள் என இரு பாடங்கள் இருக்கும்.

மாணவர்களின் பொது உளச் சார்பை பரீட்சிக்கும் வகையில் அமையும் முதலாவது வினாத்தாள் 45 நிமிடப் பரீட்சையைக் கொண்டிருக்கும்.

ஒன்றரை மணி நேர பரீட்சையைக் கொண்ட இரண்டாவது வினாத்தாள் ஆண்டு இரண்டிலிருந்து ஆண்டு ஐந்து வரை கற்பிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தனிப்பட்ட ''டியூஷன்களை'' நாடி அலைவதைத் தடுப்பதே வினாத்தாள்களை மாற்றி அமைப்பதன் நோக்கம் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார். [உ-10)

# நிவாரணம் கோரும் திகதி இம்மாதம் வரை நீடிப்பு

கொழும்பு மார்ச் 2

1983ஆம் ஆண்டு ஜூலை 24ஆம் திகதியிலிருந்து பாதிக்கப்பட்ட மதவழிபாட்டுத் தலங்களுக்கும், வன் செயல் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கும் நிவாரணம் வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி இம்மாதம் 24ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்கள் கப்பல்துறை துறைமுகங்கள் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-4)

### இழுபறி இன்னும் நீடிக்கிறது

# ஐ. தே. கட்சி எம்.பியாக கணேசலிங்கம் நியமனம்?

கொழும்பு, மார்ச் 2

உட்கட்சிப்பூசல் காரணமாக நீண்ட நாட்களாக நிரப்பப்படாது இருக்கும் ஐ.தே.க கட்சியில் தேசியப் பட்டியல் எம்.பிக்கள் இருவரது வெற்றிடங்களில் ஒன்றுக்கு—

கொழும்பு மேயர் திரு. கணேசலிங்கத்தின் பெயர் இடம்பெற்றுள்ளதாக அக்கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாக 'திவயின' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ. தே. கட்சி தனது தேசியப்பட்டியலில் முதலில் பத்திரிகைதுறையைச் சேர்ந்த தினேஷ் தொடங்கொடவின் பெயர் இடம்பெற்றிருந்ததாகவும் பின்னர் அவரது பெயரைப் பட்டியலிலிருந்து நீக்க வேண்டியிருந்தது என்றும் அந்த உறுப்பினர் தெரிவித்தார்.

கணேசலிங்கம் நாடாளுமன்ற அங்கத்தவராக நியமனம் பெறின் அவர் வகித்து வந்த கொழும்பு மேயர் பதவிக்கு தஹம் விமலசேனாவை நியமிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டபோதிலும் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் அதைக் கடுமையாக ஆட்சேபித்ததால் இந்த விடயம் மேலும் சிக்கலடைந்துள்ளதாக அந்த உறுப்பினர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

### ஜனாதிபதி மாளிகையில் இருந்து

# இரத்தினக்கல் மாயமானது குறித்துமீண்டும் விசாரணை

கொழும்பு, மார்ச் 2

முன்னைய ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி மாளிகையின் வழிபாட்டு அறையில் வைக்கப்பட்டிருந்த விலை மதிப்பிடற்கரிய இரத்தினக்கல் ஒன்று காணாமற்போன சம்பவம் தொடர்பான விசாரணையை இரகசியப் பொலீஸார் மீண்டும் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரத்தினக்கல் முன்னர் கொழும்பு மியூஸியத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதி மாளிகையின் வழிபாட்டு அறையில் வைப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ஒருவரின் மனைவியின் உத்தரவின் மீது இந்த இரத்தினக் கல் மியூஸியத்தில் இருந்து அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அந்த இரத்தினக்கல் மியூஸியத்தில் இருந்து அகற்றப்படுவதை விரும்பாத மியூசியத்தின் உதவிப் பணிப்பாளர் ஒருவர், அந்தக் கல்லை கண்ணாடிப் பெட்டி ஒன்றினுள் வைத்துப் பூட்டி, அப்பெட்டியின் திறப்பை தம்முடன் வைத்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்ணாடிப் பெட்டியையே ஜனாதிபதி மாளிகைக்குக் கொண்டு வரும்படி உதவிப் பணிப்பாளருக்கு உத்தர விடப்பட்டும் அவர் அதனை செயற்படுத்தவில்லை. இறுதியில் அக்கண்ணாடிப் பெட்டி உடைக்கப்பட்டு, இரத்தினக்கல் ஜனாதிபதி மாளிகைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஜனாதிபதி மாளிகையின் வழிபாட்டு அறையில் இருந்து காணாமற்போன அந்த இரத்தினக் கல் பற்றிய விசாரணை முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்காவின் காலத்தில் ஆரம்பமானது. பின்னர் அது நிறுத்தப்பட்டது.

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர் இரகசியப் பொலீஸார் இவ்விசாரணையை மீண்டும் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

# பரீட்சார்த்த கரட் விதை உற்பத்தி வெற்றி

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த திரு. சின்னையா ஆழகானந்தம் என்ற விவசாயியால் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட கரட் விதை உற்பத்தி வெற்றியளித்துள்ளது.

இதுவரை காலமும் வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட விதைகள் மூலமே யாழ். மாவட்டத்தில் கரட் பயிர் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் கடந்த வருடம் இவ்விவசாயியால் பரீட்சார்த்தமாக பெறப்பட்ட விதையிலிருந்து இம்முறை கரட் உற்பத்தி நல்ல விளைவைப் பெற்றுள்ளதாக தெரிய வருகிறது.

கரட் விதை உற்பத்தி முயற்சிக்காக பல ஆராய்ச்சி நிலங்களில் நடக்தப்பட்ட ஆராய்ச்சிகள் அதிகளவு பயனளிக்காதபோது இந்த விவசாயின் முயற்சியினால் பெறப்பட்ட வெற்றி பாராட்டப்பட வேண்டியது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் செய்திக் குறிப்பொன்றில் தெரிவித்துள்ளனர். [இ]

# நியாய விலையில்

தெல்லிப்பழை, மார்ச் 2

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம் தற்காலிகமாக இயங்கி வரும் தமது கிளைகளில் மரக்கறி, வாழைப் பழம் போன்றவற்றை நியாய விலைகளில் வழங்கி வருகின்றது. (இ-14-68)

**காட்டை அழிக்க நாடழியும்**
**கழனி செல்வமும் தாள் ஒடுங்கும்**

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

இரும்புத்தகடு, தண்ணீர் தாங்கி, 8x4 சதுரஅடி, 1½ நூல், இரும்புத்தகடு. 8x8x4 கனஅடி தண்ணீர் தாங்கி 12 அடி நீள உருளை வடிவத் தண்ணீர்த் தாங்கி என்பன விற்பனைக்குண்டு. 'மில்க் வைற்'. [சி-704]

பொமனேரியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். க. பத்மன், இல. 21, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். (35447)

8 மாத வயதுடைய தாய சடைச் சனல் ஆட்டுக்கடா விற்பனைக்குண்டு. தொடர்பு: க. இராஜரட்ணம் ஆசிரியர், ஏழாலை தெற்கு, உபதபாற் கந்தோர் அருகில், ஏழாலை. [8262]

**மாணவர்கள் கவனத்திற்கு**

விற்பனையாகின்றது; புதிய செயல் நூல் தமிழ் மொழி ஆண்டு 1, ஆண்டு 2 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள முதல் மொழி – தமிழ் – பாடத்திட்டத்தின் ஆறுவிடயப் பரப்புகளும் இடம்பெற்றுள்ளன. கேட்டல் — கிரகித்தல், பார்வைப் பிரித்தறிகை, உளவியக்கச் செயற்பாடுகள், பேச்சு மூலம் வெளிப்பாடு, வாசிப்பு, எழுத்து. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8355)

விற்பனையாகின்றது: புதிய பாடநூல் நாமும் சுற்றாடலும் ஆண்டு 2 விளக்கப்படங்களுடன் கூடியது. 1994ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்துள்ள தேசியக் கல்வி நிறுவகம் ஆரம்பக் கல்வித்துறை ஆண்டு 2க்கு ஆன விரிவான பாடத்திட்டம் முழுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (8354)

**வகுப்புகள்**

Diploma in Home Management, பயிற்சி நெறி [சமையல்கலை, ஐஸிங், தலையலங்காரம், உடை தயாரிப்பு உள்ளடக்கியது] ஆரம்பம்: 10 – 3 – 95 வெள்ளிக்கிழமை வளர்மதி முன்னேற்றக் கழகம், சம்பியன் வீதி, கொக்குவில். (35434)

**இலவச வகுப்புகள்**

க. பொ. த. (சா/த)கணித பாட, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்புகள் நடைபெறுகின்றன. வளர்மதி முன்னேற்றக்கழகம், கொக்குவில் (35448)

**மணமக்கள் தேவை**

கனடாவில் நிரந்தர வதிவுரிமையுடைய 8இல் செவ்வாயுடைய 36 வயது மணமகனுக்கும், உதயத்தில் செவ்வாயுடைய 33 வயது மணமகளுக்கும் பட்டதாரி மணமக்கள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. கனடாவுக்கு ஸ்பொன்சர் செய்யலாம். முழுவிவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். இல. 763, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [35355]

**இலகு திருமண சேவை**

30 வயது, அவிட்டம் 1, செவ்வாய் 8, பிரான்ஸில் பத்து ஆண்டுகள் தொழில் புரிந்து யாழ். வந்துள்ளார். சொந்தத்தில் தொழில் ஆரம்பிக்க உள்ளவருக்கு ஆசிரியை விருப்பத்தக்கது. து. விமலா, நாச்சிமார் கோயிலடி. [35453]

## பேடன் பவல் தினம்

பேடன் பவல் தினம் கடந்த புதன்கிழமை பளை மத்திய கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரி பிரதி அதிபர் திரு. சி. தவராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பளை பிரதேச செயலர் திரு. கு. பாலச்சந்திரன் கலந்து கொண்டார். (ஒ-14)

## விஷமிகள் தொல்லை

சாவகச்சேரி சந்தைக்குச் செல்வோர் மீது அழுகிய தக்காளிப் பழங்கள் மற்றும் அழுகிய உருளைக்கிழங்குகளால் எறிந்து சிலர் சேட்டை விடுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. [க-117]

---

வலி–கிழக்கு தென்பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி

## வெதுப்பி சுடுநர் (பாண்) உதவியாட்களுக்கான விண்ணப்பம்

மே சங்கத்தினால் நடத்தப்படும் வெதுப்பகத்திற்கு வெதுப்பி சுடுநர் (பாண்) உதவியாளர்களுக்கான விண்ணப்பங்கள் மே சங்கத்தினால் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவுதிகதி 6-3-95 ஆகும். வெதுப்பி கேக்வகை, பிஸ்கற் வகைகள் செய்வதில் அனுபவமும் முன்னர் வெதுப்பகத்தில் தொழில் புரிந்த அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் பேசி தீர்த்துக் கொள்ளப்படும். விண்ணப்பிக்க விரும்புவோர் தமது விண்ணப்பத்தை எழுத்துமூலம் 6 – 3 – 95க்கு முன்னர் 'பொது முகாமையாளர், வலி–கிழக்கு [தெ.ப.]ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

– பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1995-02-25 [சி/705]

---

## கண்ணீர் அஞ்சலி

### திரு.செல்லத்துரை அம்பிகைபாலன்

(தொழில் நுட்ப அலுவலகர்)

எமது வித்தியாலய விஞ்ஞான ஆசிரியை
திருமதி பிறேமாநிதி அம்பிகைபாலன்

அவர்களின் அன்புக் கணவரின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்.
சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
மானிப்பாய்.
(35452)

---

## 1-ம் ஆண்டு நினைவுகளில்



பிறப்பு: 06 — 05 — 1925

இறப்பு: 13 — 03 — 1994

### அமரர் செல்லையா குமாரசுவாமி

[ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர்]

திதி: 02 — 03 — 1995

அன்புடன் பண்போடு
கண்டிப்பையும் கலந்து
எம்மை வழி நடத்திய
எம் குலவிளக்கே ...
நீங்கள் அணைந்ததினால் – நாம்
இருளை அணைத்தவர்களானோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி. [35440]

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 10 — 1978

மறைவு: 21 — 02 — 1993

செல்வி
### சிவசுப்பிரமணியம் அனுராதா

(தெ. ம. மகளிர் மாணவி)

திதி: 2 — 3 — 1995

எங்கள் அன்புச் செல்வமே! ஆசை மகளே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
அழகுப் பெட்டகமே!
உனை மறந்து எம்மால் வாழமுடியவில்லையே
அம்மா!
உன் முல்லைச் சிரிப்பும், குறும்புக் கதைகளும்
எம்மை நிலைகுலைய வைக்குதம்மா!
ஆண்டு இரண்டு சென்றிடினும் ஆறுதில்லை
எம் துயரம்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணா, தம்பி,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

'பரமேஸ்வரி பவனம்'
சித்தம்பாதி,
சரணவாய். (35349)

---

## கண்பரிசோதனை

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கடந்த 26ஆம் திகதி நடத்திய கண்பரிசோதனை முகாமில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 300 பேருக்கு கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் (செல்வி) ம. சரவணமுத்துவினால் 85 பேருக்கு கண்பரிசோதனையும்—

யாழ். கண் பரிசோதனை நிறுவனமான எஸ். எம் பெர்ணாண்டோ நிறுவன நிபுணர்களால் 215 பேருக்கு கண்ணாடி வழங்குவதற்கான பரிசோதனையும் நடத்தப்பட்டன. (க-117)

## சுழிபுரத்தில் நடமாடும்சேவை

சுழிபுரம் மேற்குப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற நடமாடும் அரச அலுவலகர் சேவையின் போது பொது மக்கள் தங்கள் தேவைகள் பலவற்றை பூர்த்தி செய்து கொண்டனர்.

இதன்போது அரச ஊழியர் பலரும் பங்கேற்றனர். [ஒ-5-28]

## பல்கலைக்கு விளையாட்டு உபகரணங்கள்

யாழ்ப்பாணம், மார்ச். 2

யாழ். பல்கலைக்கழக உடற்கல்விப் பிரிவுக்கு சுமார் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை உடற்கல்விப் பணிப்பாளர் திரு. சி. தியாகராஜாவின் வேண்டுகோளுக்கிணங்க வடக்கு. கிழக்கு மாகாண சபை புனரமைப்பு செயலாளரின் பணிப்புரையின் பேரில் வழங்கப்பட்டுள்ளன (இ-5)

## திறமை அடிப்படையில் பதவிகள்

கொழும்பு, மார்ச். 2

நிர்வாக சேவையாளர்களுக்கு இனிமேல் திறமை அடிப்படையிலேயே நியமனமும், பதவி உயர்வுகளும் வழங்கப்படும் என்று பிரதி அமைச்சர் பி. பி. ஜீ. கலுகல்ல தெரிவித்துள்ளார்.

அதே சமயம் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வுகள் எவற்றையும் தமது அரசு ரத்துச் செய்யப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார். (இ-5-3)

---

அரசுக்கு ஆதரவாக வாக்களித்த

# இ. தொ. கா. எம். பிக்கள் ஐவர்மீதும் ஐ.தே.க. நடவடிக்கை எடுக்கமுடியாது!

### சிரேஷ்ட தலைவர் தகவல்

கொழும்பு, மார்ச். 2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் முதலாவது வரவு–செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக கடந்த வாரம் வாக்களித்ததற்காக இ.தொ. கா எம். பிக்கள் மீது ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுக்க முடியாது.

இ. தொ. காவின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்திலேயே இ.தொ.கா. போட்டியிட்டது என்றாலும் இ.தொ.கா. எம்.பிக்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் அல்லவே. பின்னர் எப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அச்சிரேஷ்ட தலைவர் கேட்டார். (ஐ-எ)

# ஈழத்தில்வெளிவரும்சஞ்சிகைகளுக்கு வாசகர் ஆதரவு வழங்க வேண்டும்

### பேராசிரியர் சண்முகதாஸ் வேண்டுகோள்

வல்வெட்டித்துறை, மார்ச் 2

ஈழத்து சஞ்சிகைகளுக்கு அறிஞர்கள், வாசகர்கள் ஆகியோர் ஆதரவு என்னும் ஊட்டச்சத்தினை வழங்கி வாழ்வளிக்க வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

வல்வை அ.மி.த.க. பாடசாலையில் நடைபெற்ற 'பாவை' முத்திங்கள் அறிவு மலர் வெளியீட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

இந்திய சஞ்சிகை மோகப் பிடியிலிருந்து விடுதலை பெற்று; தரமான கலை இலக்கியக் கருத்துள்ள ஈழத்து சஞ்சிகைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. இவ்வரிய வாய்ப்பினை தமிழீழ மக்கள் வரவேற்று மகிழ வேண்டும்.

இந்தியாவில் உள்ள பெருமளவிலான சாக்கடை சஞ்சிகைகளும் வாராந்த பத்திரிகைகளும் அங்கு விலை போகாத நிலையில் தமிழீழத்தில் பெருமளவில் விலை போயின. தமிழீழ விடுதலைப் புலிகளும் கலை பண்பாட்டுக் கழகமும் இணைந்து எடுத்த முடிவின் பயனாக, தென்னிந்தியக் கவர்ச்சிப் பத்திரிகைகளிடமிருந்து தமிழீழ மக்கள் மீட்கப்பட்டதோடு, இன்று தமிழீழத்தில் பல தரமான சஞ்சிகைகள் வெளிவருவதற்கும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் பல தரப்பட்ட விடயங்களைக் கொண்டுள்ளதாக 'பாவை' முத்திங்கள் அறிவு மலர் சஞ்சிகை வெளிவருகின்றது என்று அவர் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி திரு சோ. சிவசுந்தரம் (காண்டீபன்) தலைமையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினர்களாக 'நங்கூரம்' சஞ்சிகை ஆசிரியர் திரு. அ. ஐங்கரநேசன், கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன், திரு. விபுலன் ஆகியோர் கலந்து கொண்டனர். முதற்பிரதியை திரு. வ. இ. நடனசிகாமணி பெற்றுக் கொண்டார். திரு. அதி. ரூபசிங்கம் ஆய்வுரை வழங்கினார். பதிலுரையை 'பாவை' ஆசிரியர் 'ஈழத்தீபன்' நிகழ்த்தினார். (க-14-155)

# மகளிர் நலன்பேண பல நடவடிக்கைகள்

### மாநகரசபை மேற்கொள்ளும்

யாழ்ப்பாணம், மார்ச் 2

சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன், மகளிர் நலன் சம்பந்தமான புதிய பல நடவடிக்கைகளை யாழ். மாநகரசபை எடுக்கவுள்ளதாக, யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இத் திட்டங்களின் படி பெண்களின் சுகாதாரம் போஷாக்குநிலை, மேம்பாடு மற்றும் பிள்ளைகளின் போஷாக்கு. நோய் நிலை என்பன தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகளிர் தினமான இம் மாதம் 8ஆம் திகதி, மகளிர் மேம்பாடு சம்பந்தமான நிகழ்ச்சி ஒன்றுக்கு யாழ். மாநகரசபை ஏற்பாடு செய்துள்ளது.

இந் நிகழ்ச்சி அன்றைய தினம் மாலை 3 மணியளவில், நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மாநகர ஊழியர்களால் தயாரிக்கப்பட்ட சுகாதாரக் கல்வி சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் அதில் இடம் பெற உள்ளன. அத்துடன், கடந்த வருடத்தில் சிறந்த சேவையாற்றிய குடும்பநல உதவியாளர்கள் அந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர். [ஐ-5]

## நாகதம்பிரான் ஆலய திருப்பணி ஆரம்பம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் நாகதம்பிரான் கோயில் திருப்பணிவேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

திருப்பணி வேலைகளின் பொருட்டு இக் கோயிலில் அண்மையில் பாலஸ்தாபனம் நடைபெற்றது. (இ-173]

# முன்பள்ளி மேம்பாட்டு நிலையத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 2

''முன்பள்ளி மேம்பாட்டு நிலைய திறப்பு விழாவும், முன்பள்ளிக் கல்விக் கலைத் திட்ட நூல் வெளியீட்டு விழாவும் கடந்த 7 ஆம் திகதி பிற்பகல் 3-30 மணியளவில் கந்தர்மடம் அரசடி வீதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு கா. சிவா தலைமை தாங்கினார். மங்கல விளக்கினை யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் க. சின்னத்தம்பி, செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜெனனி, இணையச்செயலர் சி கதிரவேலு, த. பு. க. செயலர் க. இலங்கேஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தினை அருட்தந்தை திரு செல்வரட்ணம் அவர்கள் திறந்து வைத்தார். நூல் நிலையம், வள நிலையம் என்பவற்றை றெட்பானா நிறுவன திட்ட இணைப்பாளர் திரு. பாலகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

பின், முன்பள்ளிக் கல்விக் கலைத்திட்ட நூலை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் வெளியிட்டு வைக்க புனர்வாழ்வுப் பிரிவுப் பொறுப்பாளர் சி. ரவி முதல் பிரதியை பெற்றுக்கொண்டார். பின், வெளியீட்டுரையை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ச. சுப்பிரமணியம் நிகழ்த்தினார். சிறப்புரையை அருட்தந்தை திரு. செல்வரட்ணமும், பல்கலைக்கழக கல்வித்துறையைச் சேர்ந்த க. சின்னத்தம்பியும் நிகழ்த்தினார்கள். இறுதியாக நன்றியுரையை நிலைய நிர்வாக உத்தியோகத்தர் செல்வி திலகராணி நிகழ்த்தினார். [க]

# வாசிப்புஆர்வம்பெருகுவது பாராட்டத்தக்க விடயம்

### யாழ். இந்து அதிபர் கூறுகிறார்

''பாடசாலை மாணவரிடையே இப்போது வாசிப்புப் பழக்கம் ஓரளவு பெருகி வருகிறது, அவர்கள் தேடலைக் கைக்கொண்டு பல நல்ல நூல்களை பணம் கொடுத்தும் கூட வாங்கிப் படிக்கிறார்கள்.இதுபாராட்டத்தக்கது.''

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.


அண்மையில் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற 'அறிவுக்களஞ்சியம்' சிறப்பு பொது அறிவுப் போட்டியின் வினா - விடைப் போட்டி பரிசளிப்பு விழா நிகழ்வுகளுக்கு தலைமை வகித்து உரையாற்றிய போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது;

''பாடசாலை மாணவரிடையே அதிகரித்து வரும் வாசிப்புப் பழக்கத்தால் அவர்களிடையே பொது அறிவும் வளர்ந்து காணப்படுகிறது; இத்தகைய அறிவு முன்னேற்றத்துக்கு கலை, இலக்கிய விஞ்ஞான விடயங்கள் பலவற்றையும் உள்ளடக்கி வெளிவரும் 'அறிவுக்களஞ்சியம்' போன்ற சஞ்சிகைகள் பெரிதும் உதவுகின்றன— என்றார். நிகழ்ச்சியில், வினாடி வினா போட்டியில் வெற்றி பெற்ற மூவருக்கும், பங்குபற்றிய மேலும் 7பேருக்கும், பார்வையாளர் மூவருக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. [இ-5]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அவனிக்கு வரவு: 13 — 03 — 1956

அவனிடம் விரைவு: 31 — 01 — 1995

### அமரர் வைத்திலிங்கம் ஜெகதாஸ்

(இராசன்)

(கிராம சேவை அலுவலர், உரும்பிராய் வடக்கு)

அன்புக்கிலக்கணமாய், பண்பிலே தெய்வமாய், பாசத்தின் உறைவிடமாய், எம்மை எல்லாம் அன்புடன் இணைத்த தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடைய விநாயகனைப் பிரார்த்திப்பதுடன், என்றும் நீங்கா நினைவுடையோம்.

01-02-1995இல் நடைபெற்ற எமது குடும்பத் தலைவர் வைத்திலிங்கம் ஜெகதாஸ் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டும், மலர் வளையங்கள் சாத்தியும், மலர் மாலை சூட்டியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், பலவித உதவி, ஒத்தாசை புரிந்து, பலவித பங்களிப்பைப் பயனுடன் வழங்கிய நண்பர்கள், பொது ஸ்தாபனங்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினரின் உளமார்ந்த நன்றியை நவில்கின்றோம்.

அத்துடன் இன்று (02-03-95) வியாழக்கிழமை நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, பெற்றோர், மாமியார்,
சகோதரர், மைத்துனர்.

உரும்பிராய் வடக்கு. (35454)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
202/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## உகந்த தூண்டுதல்

தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு பெப்ரவரி 25 ஆம் திகதியிட்டு எழுதிய கடிதம் நேற்று முன்தினம் லண்டனில் வெளியிடப்பட்டது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பரிமாறப்பட்ட கடிதங்களில் சர்வதேச மட்டத்தில் பகிரங்கப்படுத்தப்பட்ட முதலாவது கடிதம் இதுவாகும்.

அந்தக் கடிதம் சர்வதேசங்களுக்கும் பகிரங்கப்படுத்தப்பட்டமை இரண்டு வகைகளில் பயனுள்ளது என்று கருதப்பட வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக காத்திரமாக, கனதியாக எதனையுமே செய்யாமல், சில மேனி மினுக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு விட்டு, உலக நாடுகளை ஏமாற்றும் விதத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் பொய்ப் பிரசாரம் செய்து வருகிறது.

வெளிநாடுகளிடம் இருந்து நிதி உதவி பெறுவதற்காக, குறிப்பாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவும் நாடுகள் மாநாட்டை முன்னிட்டு, தமிழர் விவகாரத்தில் தான் பெரிதாக எல்லாம் செய்துவிட்டதாகக் காட்டும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளது.

ஆகையால் உண்மை நிலையை உலகுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசிய தேவை உருவாகி இருக்கிறது. இது குறித்து கடந்த திங்கட்கிழமை இப்பத்தியில் வலியுறுத்தி இருந்தோம். அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய உண்மையை உலகுக்குச் சொல்லும் சேவையை ஆரம்பிக்கும் வகையில் தலைவரின் கடிதம் பிரசித்தப்பட்டிருப்பது உரிய விளைவைத் தரும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கலாம்.

தலைவரின் கடிதம் சர்வதேச மட்டத்தில் வெளியிடப்பட்டதால் கிடைக்கும் இரண்டாவது நன்மை அல்லது சிறப்பு அது தலைவர் பிரபாகரனதும் விடுதலைப் புலிகளினதும் நிலைப்பாட்டை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது என்பதாகும்.

அதாவது அரசாங்கம் தனது நன்மை கருதி சில குறுக்கு வழிகளையும், பொருந்தாத தந்திரங்களையும் கையாண்டாலும்—

பேச்சுவார்த்தை சமரசம் என்று வந்துவிட்டு ஒருதலைப்பட்சமான முடிவுகளை மேற்கொண்டு தனக்குள்ள சில ஒவ்வாத உள் நோக்கங்களை அடைய முற்பட்டு நின்றாலும்—

அவற்றினூடாக தமிழர்களுக்கு ஏமாற்றத்தையும், நயபிக்கைக் குறைவையும் உண்டாக்கினாலும்—

போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்பதிலும், பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு ஒன்றை எட்ட வேண்டும் என்பதிலும் விடுதலைப்புலிகள் எவ்வளவு அக்கறையாக உள்ளார்கள் என்பதனை — தலைவர் பிரபாகரனின் கடிதம் பசுமரத்தாணி போல இலகுவில் பதிக்கிறது.

அரசாங்கம் போரை நிறுத்துவதில் உண்மையான ஆர்வத்தைக் காட்டாது, அசமந்தப் போக்குடனும், ஏனோ தானோ என்ற அணுகு முறையுடனும் நடந்து கொண்டாலும், அது கண்டு ஆத்திரப்படாது, எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு, சமாதான முயற்சியில் சலிப்படையாது, அதனை முன்னெடுப்பதில் அவருக்குள்ள அக்கறையையும் தலைவரின் கடிதம் மிகத் தெளிவாக்குறது.

மேலும், தமிழ் மக்களின் அவசர தேவைகளுக்கு மேலானதாக, இராணுவத்தின் போர்த் தந்திரோபாய நலன்களுக்கே அரசாங்கம் முதன்மை கொடுக்கிறது என்பது கடிதத்தில் குறிப்பாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அந்த ஒரு வசனமே அரசாங்கம் எங்கே நிற்கிறது: அது போரை மறந்து விடவில்லை என்பதனை வரிக்களுக்கூடாக விளங்க வைக்கிறது.

மொத்தத்தில் தலைவரின் கடிதம், சந்திரிகா அரசாங்கம் குறித்து வெளி உலகம் விழிப்பாக இருப்பதற்குப் பெரும் தூண்டுதலாக அமையும்.

# பூநகரிமுகாம் நகர்த்தப்பட்டாலும் துருப்புக்கள் குறைக்கப்படமாட்டா

## சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தகவல்

கொழும்பு, மார்ச் 2

வடபகுதியில் பலாலி மற்றும் ஆனையிறவு இராணுவ தளங்களுக்கு அடுத்த பெரிய தளமாக பூநகரி விளங்குகின்றது.

சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி 'த ஐலண்ட்' இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

பூநகரி வீதி மற்றும் பல மான 'நிலை'களில் இருந்து துருப்புக்களை நகர்த்துவதைத் தவிர பூநகரி தளத்தில் உள்ள படையினரின் எண்ணிக்கையை குறைக்கும் எண்ணம் கிடையாதென்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூநகரி தளத்தில் சுமார் 5 ஆயிரம் படையினர் நிலைகொண்டுள்ளனர். காலாட்படை, கவசப்படை, ஆட்டிலறி மற்றும் அவற்றுக்கு துணையான பிரிவுகளைச் சேர்ந்த படையினரும் இவர்களில் அடங்குவர் என்றும் 'த ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

பூநகரியில் சில இடங்களில் 600 மீற்றர்களுக்கு அதிகமான தூரத்துக்கு படையினரை நகர்த்த இராணுவம் எண்ணியிருப்பதாகவும்—

போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்கத்துடன் இது மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்— என்றும் 'ஐலண்ட்' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-எ)

# இனவாத சிந்தனையை கைவிட்டால் சமாதான முயற்சியில் வெற்றி கிட்டும்

## அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா கூறுகிறார்

தற்போதைய சமாதான முயற்சி வெற்றிபெறுவதற்கு குறுகிய இனவாத சிந்தனைகளை நாம் கைவிட வேண்டும்.

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டீ சில்வா முன்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற அரச அதிகாரிகளின் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனை வலியுறுத்தினார்.

இனவாதப் போராட்டங்களைத் தவிர்த்து சமாதானத்தை நிலைநாட்டுவதைத் தவிர வேறு வழியே கிடையாது. இம்முயற்சிகளில் அரசு வெற்றிபெறாவிட்டால் இந்த நாட்டின் பொருளாதாரம் முற்றாகவே அழிந்து போகும். இதனால் இந்த நாட்டுக்கு விமோசனமே கிடையாதென எல்லா உலக நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். [ஐ-எ]

# தப்பியோடிய விடுதலைப் புலிகளை பிடிக்க போர்க்கால நடவடிக்கை

## முதல்வர் ஜெயலலிதா உத்தரவு

சென்னை, மார்ச். 2

சென்னை மத்திய சிறைச்சாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ள விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோரை தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை 'போர்க்கால அடிப்படையில்' மேற்கொள்ளுமாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலிதா பொலீஸ் உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் தப்பி ஓடிய விடயம் தொடர்பாக நிலைமையை ஆராய்வதற்கு என அரச உயரதிகாரிகளின் அவசர கூட்டம் ஒன்றை முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் கூட்டினார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் பலப்படுத்துவதற்காக சென்னை மத்திய சிறைச்சாலைக்கு தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் அணி ஒன்றை அனுப்பி வைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

இதனிடையில் தப்பி ஓடிய சந்தேக நபர்கள் தமது மாநிலத்துள் புகுந்து விடுவதை தடுக்கும் முகமாக கர்நாடக பொலீஸார் புதிய காவல் நிலையங்களை அமைத்துள்ளதாகவும்—

பெங்களூர் உளவுப்பிரிவு புலனாய்வுப் பிரிவு ஆகியன உஷார் நிலையில் இருக்க வேண்டும் என எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5)

## கண் சத்திர சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், மார்ச். 2

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவில் நடைபெறும் கண் சத்திர சிகிச்சை முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சங்கானை அரசினர் வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது.

சிகிச்சைக்கென ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி வைத்தியசாலையில் சமுகம் அளிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர். (இ-14)

## அதிபர் கூட்டம்

வேலணை ஊர்காவற்றுறைக் கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த, 5 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புகளையுடைய பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் சென் ஜோண்ஸ் அக்கடமியில், இன்று வியாழக்கிழமை பி. ப. 3 மணிக்கு நடைபெறும். என்று அப்பகுதி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# மட்டக்களப்பு ஆஸ்பத்திரி தரம் உயர்த்தப்படும்

## முதல் கட்டவேலைகள் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 2

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியை போதனா வைத்திய சாலையாக தரமுயர்த்துவதற்கான முதலாம் கட்ட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக சுகாதார, சமூக சேவைகள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தெரிவித்திருக்கிறார்.

(ஐ-எ)

## வெளிநாடு சென்றுள்ள

# ஊழல் பேர்வழிகளின் சொத்து பறிமுதலாகும்

எயர்பஸ் விமானங்களைக் கொள்வனவு செய்த விவகாரத்தில் இடம்பெற்ற முறைகேடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாடுகளில் இருப்பினும் அவர்களுக்கு இலங்கையில் உள்ள சொத்துகள் மற்றும் உடைமைகளை அரசு பறிமுதல் செய்யும்.

அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

எயர்பஸ் கொள்வனவு முறைகேடு பற்றி விசாரணை நடத்திய முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் ஓ. எஸ். எம். செனவிரத்தினா தமது 52 பக்க அறிக்கையை அண்மையில் அமைச்சரிடம் கையளித்தார். அப்போதே அமைச்சர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கொள்வனவு நடந்தபோது எயர்லங்காவின் தலைவராக டன்ஸ்ரன் ஜெயவர்த்தனா இருந்தார்.

எயர்லங்காவின் இயக்குநர் சபையின் முக்கிய உறுப்பினராக இருந்த முன்னாள் நிதி அமைச்சுச் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தற்சமயம் வெளிநாட்டில் உள்ளார்.

விசாரணை அறிக்கையில், இவ்விமானக் கொள்வனவு தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப் படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும்— இம்முறைகேடுகளுக்குரியவர்களின் பெயர்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

செனவிரத்தினவின் அறிக்கையின்படி, முறைகேடுகளில் சம்பந்தப்பட்டவர்கள் குறித்து விசேட ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை நடத்தும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். [ஐ-எ]

## கனடா வானொலி போட்டி முடிவுகள்

கனடா ரொறன்ரோ பெருநகர்— ஆசிய வானொலியின் தமிழ் ஒலிபரப்புப் பிரிவினரால் நடத்தப்பட்ட வானொலிநாடக, சிறுகதைப் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறுகதைப் போட்டியில் திருமதி அற்புதராணி காசிலிங்கம் (மலரன்னை) இராம. ஜனார்த்தனன், செல்வி மகாராஜி மகாதேவா ஆகியோர் முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுள்ளனர்

நாடகப் போட்டியில் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

ஏனைய நாடகங்கள் போட்டி விதிக்கமைய எழுதப்படமையால் 2ஆம் 3ஆம் இடங்கள் எவருக்கும் வழங்கப்பட வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்துக்களுக்கு வேதனை அளிக்கும் திருக்கேதீஸ்வரத்தின் இன்றைய நிலை

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றாக விளங்கும் பெருமை பெற்றது திருக்கேதீஸ்வரத் திருத்தலமாகும்.

மன்னாரில், மாதோட்ட நன்நகரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தரிசித்து ஈடேறும் பொருட்டு, இலங்கையின் நாலா பக்கங்களில் இருந்து மட்டுமல்ல, இந்தியா, மலேஷியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்தும் இந்துமக்கள் இப்புண்ணிய பூமியில் கூடுவது, பல நூற்றாண்டுகால வழக்கமாகும்.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தின் இன்றைய நிலை, இந்துக்களுக்கு பெரும் மனவேதனையை அளிக்கும் ஒன்றாகும்.

வேத ஒலியும், நாதஒலியும், அரோஹரா கோஷமும் வானை முட்டிய திருக்கேதீஸ்வரத் திருத்தலமா இது? என்று வினவும் நிலைக்கு வந்துவிட்ட துர்ப்பாக்கியத்தைக் காண்கின்றோம்.

1990 இல் வெடித்த வடக்கு - கிழக்கு யுத்த அனர்த்தங்களையடுத்து, இக்கோயில் நிலை சீர்குலைந்தது.

பூசகர்களும், பணியாட்களும், ஆலயத்தை விட்டு ஓடும்நிலை ஏற்பட, பிரசித்தி பெற்ற இவ்வாலயமும், அதனோடிணைந்த மடங்களும் நொருக்கப்பட்டதுடன், பொருள்களும் சூறையாடப்பட்டன.

சுவாமி விக்கிரகங்களும், சுவாமியை அலங்கரிக்கும் விலையுயர்ந்த தங்க ஆபரணங்களும், பூஜைப் பொருள்களும் மற்றும் விலையுயர்ந்த பொருள்களும், சமையல் பாத்திரங்கள், உணவுப் பொருள்கள் யாவும் அபகரித்துச் செல்லப்பட்டன. கோயில்களும், மடங்களும் வெறுமையாகின.

வெளியில் நின்று நோக்கினால் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் இருப்பது போலத் தோன்றினாலும், உள்ளே ஒன்றுமில்லாத நிலை.

### அமைச்சரை சந்தித்து விளக்கிய தூதுக்குழு

இந்த அவல நிலை குறித்து திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபையின் முக்கியஸ்தர்கள் மற்றும் இந்துப் பிரமுகர்கள் கடந்த 19 - 01 - 1995 அன்று, கலாசார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடியைச் சந்தித்து விளக்கினர்.

கோயிலைப் புனருத்தாரணம் செய்து, அதனை வழிபாட்டுக்காக திறந்துவிட வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்கூறி, மகஜர் ஒன்றையும் கையளித்தார்கள். அத்துடன் கோயிலின் தற்போதைய நிலையை மேலும் துலாம்பரமாக எடுத்துக்காட்டும் பொருட்டு திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் செயலாளர் திரு. ச. சரவணமுத்து, தர்மகர்த்தா சபையின் தலைவர் திரு. கைலாசபிள்ளைக்கு 1993 ஜூன் 22 ஆம் திகதியிட்டு அனுப்பிய கடிதம் ஒன்றினையும் அமைச்சரின் பார்வைக்கு சமர்ப்பித்தார்கள்.

### கடித விவரம்

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தை வெளியில் நின்று பார்த்த பொழுது கட்டடம் சேதமடையவில்லைப் போலத் தெரிந்தது. திறந்திருந்த முன் கதவு வழியாகச் சென்று பார்த்த பொழுது மூலஸ்தானக் கதவு உட்பட சகல கதவுகளுமே திறந்திருந்தன. பித்தளை, வெள்ளி விளக்குகள், பாத்திரங்கள் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்கள் ஆகிய எவற்றையும் அங்கே காண முடியவில்லை. விக்கிரகங்கள் பெரும்பாலும் அப்படியே இருக்கின்றன போலத் தெரிந்தது.

''ஆலயத்திற்கு வெளியே யுள்ள மடங்கள், அர்ச்சகர்கள் வீடுகள், பணியாளர் வதிவிடங்கள் ஆகிய யாவும் அழிக்கப்பட்டோ, இடிக்கப்பட்டோ, பெரும் சேதமடைந்தோ காணப்படுகின்றன என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது

இடிபாடுகளிலிருக்க வேண்டிய கல், செங்கல், மரங்கள், கூட அகற்றப்பட்டு விட்டன. சம்பந்தர், சுந்தரர் மடங்கள் வெளிப்பார்வைக்கு அழிக்கப் படவில்லைப் போலத் தெரிந்தன. ஆனால் உள்ளே சென்று பார்த்த பொழுது கதவுகள், யன்னல்கள் மற்றும் தளபாடங்கள் யாவும் மறைந்து விட்டன. கூரையிற் பெரும்பகுதியைக் காணவில்லை என்றும்—

'குருகுலம்' என்ற பெரிய கட்டடம் இருந்த இடமே தெரியாது மறைந்து விட்டது. அக்கட்டடத்திலிருந்த 10 அறைகள், மண்டபம், மலசலகூட வசதிகள், தளபாடங்கள் யாவும் அகற்றப்பட்டு விட்டன என்றும்—

திருவாசக மடத்தின் முன் பக்கச்சுவர் மாத்திரம் சேதமடைந்த நிலையிற் காணப்படுகிறது அங்கிருந்த பெரிய பிரார்த்தனை மண்டபம், படுக்கை அறைகள் முதலிய யாவும் மறைந்து விட்டன. கௌரீசர் மடம், சிவபூசை மடம், கதிர்காம யாத்திரிகர் சபையினரின் மடம், விஸ்வகர்ம சபையினரின் மடம், செட்டியார் மடம், ஓவசியர் மடம், சிவராத்திரி மடம் முதலியன ஏறத்தாழத் திருவாசக மடம் போன்று சேதமடைந்துள்ளன மிகப் பெறுமதி வாய்ந்த நூல்களைக் கொண்டிருந்த நூல் நிலையம் பெரும் சேதமடைந்துள்ளதுடன் அங்கிருந்த நூல்கள் யாவும் மறைந்து விட்டன. என்றும்—

மலேசியா அடியார்களால் கட்டப்பட்டதும் 11 அறைகளைக் கொண்டிருந்ததுமான 'மலேசிய யாத்திரிகர் இல்லம்' பெரிதும் சேதமடைந்துள்ளது. அங்கிருந்த பெறுமதி மிக்க தளபாடங்கள் எவையுமில்லை. அப்பெரிய [illegible] வைத்திய நாதன் கட்டிய 'கொட்டில்' எனப்படும் மடம், வி. கயிலாசப்பிள்ளை இ. நமசிவாயம் ஆகியோர் கட்டிய மடங்கள் யாவும் முற்றாக மறைந்து விட்டன. என்றும்— கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### படையினர் நடத்திய தாக்குதல்

1990 ஒகஸ்ட் 7ஆம் திகதி படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலே கோயில் சேதமடையக் காரணம் ஆகும்.

அன்று தள்ளாடி முகாமைச் சேர்ந்த படையினர் கவச வாகனங்களில் திருக்கேதீஸ்வரம் கோயிலுக்குச் சென்று கண்டபடி சுட்டனர். பணியாளர்களுக்கான வீடுகள், திருவாசக மடம், அகதிகள் சிலர் வந்த லொறி, டிராக்டர் ஆகியவற்றுக்குத் தீவைத்தனர்.

மீண்டும் மறுநாள் நூற்றுக் கணக்கில் மூன்றுலொறிகளில் வந்த படையினர் கண்டபடி சுட்டதுடன், கோயிலின் பெறுமதியான மின்சார ஜெனரேட்டர் 5, சிறிய ஜெனரேட்டர்கள் 100, சிமெந்து பைகள், பணியாளர் விடுதிகளிலிருந்த சமையல் பாத்திரங்கள், வானொலிப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள், சீனி, அரிசி, மா முதலிய உணவுப் பொருள்கள் ஆகியவற்றையும் எடுத்துச் சென்றனர்.

இதன்பின் 9-8-90 அளவில், கோயில் குருக்கள்மார், பணியாளர்கள் ஆகிய யாவரும் கோயிலைப் பூட்டி விட்டு அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டனர்.

இது சம்பந்தமாக 1992 ஜனவரி முதலாம் திகதி ஜோஸப் பரராஜசிங்கம் எம். பி. நாடாளுமன்றத்தில் பேசுகையில், திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு ஏற்பட்டுள்ள அழிவுகளுக்கும் 16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கீசரால் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளுக்கும் அதிக வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை என்றார்.

கோயிலைத் திறந்து பூஜை முதலிய சமயக்கிரியைகளைச் செய்வதற்கு வசதியாக இராணுவம் கோயில் சுற்றாடலிலிருந்து வேறு இடத்துக்கு செல்ல வேண்டும் என்றும் இவர்கேட்டிருந்தார். ஆனால் இதுவரை இக்கோரிக்கைக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை.

9 - 8 - 90 இல் அர்ச்சகர்கள், பணியாளர்கள் அனை [illegible] வெளியேறிய பொழுது அங்கிருந்த மடங்கள், கட்டடங்கள் யாவும் 7- 8-90 இல் இராணுவத்தினால் ஏற்பட்ட சேதம் நீங்கலாக எவ்வித சேதமடையாதிருந்தன.

எனவே 7-8- 90 தொடக்கம் ஏற்பட்ட சேதங்கள், அழிவுகள் யாவற்றிற்கும் இராணுவமே முழுப்பொறுப்புடையதாகும்.

ஆலயத் திருப்பணிச் சபையினர் 1948 தொடக்கம் பல்வேறு நாடுகளிலுமிருந்த இந்துக்களின் உதவியுடன் பெரும் செலவில் செய்த திருப்பணி வேலைகள் நாசமாகி விட்டன.

'குருகுலம்' போன்ற சில கட்டடங்கள் முற்றாக மறைந்து விட்டன. அக்கட்டடங்களின் இடிபாடுகள் கூடக் காணப்படவில்லை.

இடிபாடுகளிலிருந்த கற்கள் மரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி மாந்தைச் சந்திக்கு வடக்குப் பக்கமாக அடம்பன் நோக்கி ஒருநீண்ட பாதுகாப்புச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு மடங்கள், கட்டடங்களிலிருந்த தளபாடங்கள் முதலியன முக்கியமாக மலேசியா யாத்திரிகர் இல்லத்திலிருந்த பெறுமதி வாய்ந்த கட்டில்கள், மேசைகள், கதிரைகள் ஆகியன அப்பகுதியில் இப்பொழுதுள்ள ராணுவ முகாம்களில் நன்கு பயன்படுத்தப்படுகின்றன.

### கோரிக்கைகள்

மேற்கூறப்பட்டவாறான அழிவுகள், சேதங்கள் திருக்கேதீசுவர ஆலயத்திலும் மடங்கள் மற்றும் கட்டடங்களிலும் ஏற்பட்டிருப்பதனால் ஆலயத் திருப்பணிச்சபை அரசாங்கத்திடம் பின்வரும் உதவிகளைக் கோருதல் வேண்டும்.

1. அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட கட்டடங்கள் யாவற்றையும் புதிதாகக் கட்டுவதற்கோ, திருத்திக்கட்டுவதற்கோ வேண்டிய பண உதவியை அரசாங்கம் செய்தல் வேண்டும்.

2. ஆலயம், மடங்கள் மற்றும்கட்டடங்கள் பெற்றிருந்த நீர்வசதி, மின்சார வசதி, தொலைபேசி, வடிகாலமைப்பு வசதிகள் ஆகியவற்றை மீண்டும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

3. ஆலய அர்ச்சகர்கள், பணியாளர்கள் ஆகியவர்களுக்கும் 1990 ஒகஸ்ட் மாதத்திலிருந்து கொடுக்கவேண்டிய சம்பளங்கள், படிகள் யாவற்றையும் கொடுப்பதற்கு அரசாங்கம் உதவுதல் வேண்டும்.

4. ஆலயத்திலிருந்தும் மடங்கள் மற்றும் கட்டடங்களிலிருந்தும் இராணுவத்தினரால் 8-8 90 அன்றும் பின்னரும் எடுத்துச் செல்லப்பட்ட மின் ஜெனரேட்டர்கள் சிமெந்துப்பைகள் முதலியவற்றையும், பின்னர் காணாமல் போன தளபாடங்கள், ஆலயத்துள்ளிருந்த பித்தளை, வெள்ளிவிளக்குகள், ஆபரணங்கள், பாத்திரங்கள் மற்றும் சாமான்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு அரசாங்கம் உதவுதல் வேண்டும்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இவ்வாலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, கும்பாபிஷேகம் நடைபெறும் நாள் எந்நாள்? என சைவமக்கள் அங்கலாய்க்கின்றனர்

[நன்றி: வீரகேசரி]

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

அமரர்

**செல்லத்துரை அம்பிகைபாலன்**

(தொழில் நுப்ப உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.)

நெஞ்சிருக்கும் வரையும் உங்கள் நினைவிருக்கும் வண்ணம்
எங்கள் பணிமனையில் இனிதாய் உழைத்தவரே
உங்கள் பிரிவால் உள்ளம் மிகவருந்தி
கண்ணீர் அஞ்சலியை காணிக்கை செலுத்துகிறோம்.

நலன்புரிச்சங்கம்
யாழ் பிரதேச செயலகம்.

(35458)



## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வேலுப்பிள்ளை

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த கந்தையா வேலுப்பிள்ளை 27 - 2 - 95 திங்கள் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லப்பா சோமசுந்தரத்தின் அன்பு மருமகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விவேகானந்தன், கிருபாராணி, விபுலானந்தன், வித்தியானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், உரும்பராய் பரமானந்தம், கொழும்பு, பிரியதர்சினி ஆகியோரின் மாமனாரும், சந்திரசேகரன் (ஆசிரியர்), நவரட்ணசிங்கன் (சுகாதார திணைக்களம், கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், கோபிகிருஷ்ணா, சுகந்தா, பாலரூபன், அபினாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (2 - 3 - 95) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியை செம்மணி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த. பரமானந்தம்
(மருமகன்)

விநாயகர் வீதி,
நல்லூர், வடக்கு. (35457)

### செல்லத்துரை அம்பிகைபாலன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்)

சங்குவேலியை பிறப்பிடமாகக் கொண்டு சுதுமலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் திரு. திருமதி இ. செல்லத்துரையின் அன்பு மகனும், சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை ஆசிரியை பிரேமாநிதியின் அன்புக்கணவருமான செல்லத்துரை அம்பிகைபாலன் நேற்று 1- 3- 95 இல் காலமானார்.

இவர் துஷ்யந்தி, பிரேமபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருவாளர்கள் சிவபாலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பளை), மகேஸ்வரன் (அபுதாபி), கேதீஸ்வரன் (பாரெயின்), மகேந்திரன் (அச்சுவேலி பிரதேச சபை), திருமதி. பா சாரதாதேவி [ஆசிரியை இந்து மகளிர் கல்லூரி மானிப்பாய்), திருமதி பா. இந்திராதேவி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு. திருமதி ச. தம்பித்துரை (மக்கள்- வங்கி, சுன்னாகம்) ஆகியோரின் மருமகனும், திருமதி சி. லலிதகுமாரி, திருமதி. ம. கௌரி (அபுதாபி). தி. பாலசுப்பிரமணியம் (நில அளவையாளர், கிளிநொச்சி), வெ. பாலகிருஸ்ணன் (அவுஸ்திரேலியா), திருமதி பவானி, திருமதி சி. தபோநிதி [ஜேர்மனி], கிருபாநிதி, பிரபாகரன், கிருபாகரன், யசோதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் இன்று 2- 3- 95 பகல் 10 மணிக்கு ''மலர் வாசா'' சுதுமலை வடக்கு மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும் இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. தம்பித்துரை
(மாமனார்)

(8363)

### திருமதி கனகரட்ணம்பிள்ளை இராஜேஸ்வரி

திருநெல்வேலி தெற்கு இராமநாதன் வீதியைச் சேர்ந்த திருமதி கனகரட்ணம்பிள்ளை இராஜேஸ்வரி அவர்கள் 27 - 02 - 95 அன்று கனடாவில் காலமானார்.

இவர் சின்னப்பா கனரெட்ணம்பிள்ளையின் அன்பு மனைவியும், முருகேசபிள்ளை (இந்தியா), பத்மநாதபிள்ளை, இராஜராஜேஸ்வரி, அனுஷியா (இந்தியா), நளாயினி, சாவித்திரி, அருந்ததி (கனடா), கண்ணகி ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகலெச்சுமி (இந்தியா), பத்மினி, இரகுபதி, கனகநாதன், சதானந்தன், கருணாகரன் (கனடா), நவரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் (28 - 02 - 95) செவ்வாய்க்கிழமை ரொறான்டோவில் (கனடா) நடைபெற்றன. இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ சதானந்தன்

(35465)

### சுப்பிரமணியம் தற்பரசுந்தரம்

சாவகச்சேரி சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு மணல்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தற்பரசுந்தரம் 25-2-95 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் சுப்பிரமணியம், அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், கனகசபை பூபதியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், ஜெய்சுந்தரின் (மட்டுவில் மகாவித்தியாலயம் ஆண்டு 4 மாணவன்) பாசமிகு தந்தையும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
த. தவமணி
(மனைவி)

மணல் வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(35469)


இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02- 03 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# மேலும் 3 ஆயிரத்து 300 பேருக்கு புதிதாக ஆசிரிய நியமனங்கள்

கொழும்பு, மார்ச் 2

கிராமங்கள் மற்றும் கஷ்ட பிரதேசங்களில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக 3 ஆயிரத்து 300 பேருக்கு புதிதாக ஆசிரிய நியமனங்களை கல்வி அமைச்சு வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த மாத முற்பகுதியில் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மாவட்ட மொழி அபிவிருத்தி நிலையத்தில் [டெலிக்] ஒரு வருடப் பயிற்சி பெற்று வரும் ஆயிரத்து 750 பேர் புதிதாக நியமனம் பெறுபவர்களில் அடங்குவர்.

சடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஆங்கில ஆசிரியர் பரீட்சையில் 55 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களில் 750 பேருக்கு நேரடியாக ஆங்கில ஆசிரிய நியமனம் வழங்கப்படும்.

சித்திரம், நடனம், சங்கீதம் ஆகியவற்றைப் போதிப்பதற்கு மேலும் 800 பேர் ஆசிரியர் நியமனம் பெறுவர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

அமைச்சர் றிச்சர்ட் பத்திரான இதுகுறித்து அறிக்கை ஒன்றை திறைசேரிக்கு சமர்ப்பித்திருக்கிறார்.

[ஐ-எ]

### தலைவர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கிறார்கள் — என்றும் சொன்னார்.

''அரசு வடக்கே பொருள்களை அனுப்பாது கட்டுப்படுத்தி வருவதால் அங்கு பொருள்களின் விலை பெருமளவு உயர்ந்திருப்பதாகக் கூறப்படுகின்றதே?'' — என்று செய்தியாளர் கேட்டதற்கு —

''அனுப்பும் பொருள்களை புலிகள் எடுத்துக் கொள்வதால் விலை உயரும் நிலை ஏற்பட்டிருக்கலாம்'' — என்றார் சந்திரிகா.

**காரணங்களை வெளியிடவில்லை**

ஆனால் தலைவர் பிரபாகரன் தமது கடிதத்தில் குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்களை தாம் முற்றாக நிராகரிப்பதற்கான காரணங்களை — விளக்கங்களை — ஜனாதிபதி வெளியிடவில்லை என்று செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

அதேவேளை —

விடுதலைப் புலிகள் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் புகார்கள் நியாயமானவை தான் என அரசாங்க அதிகாரிகள் தனிப்பட்ட முறையில் ஒப்புக்கொண்டனர் என்று பி. பி. ஸி. தமிழ்ச் சேவை தெரிவித்தது.

இராணுவம் கடுமையாகச் சோதனையிடுவதால், யாழ்ப்பாணத்துக்குப் பொருள்கள் கொண்டு செல்வது தாமதப்படுகின்றது என்றும்—

வடபகுதி புனர்வாழ்வுப் பணிகளைக் கவனிப்பதற்குச் சபை ஒன்று அமைக்கப்படும் என்று அரசு வழங்கிய வாக்குறுதி செயற்படுத்தப் படாமல் போனமைக்கு திறமையின்மையும், குளறுபடியுமே காரணம்; கபடப் போக்கல்ல என்றும் —

அந்த அதிகாரிகள் குறிப்பிட்டதாக பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது.

சமாதான முயற்சிகள் வெற்றி பெறும்; என்பதில் தமக்கு நம்பிக்கையுண்டு என சந்திரிகா நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

ஆனால் —

இந்த மாநாட்டுக்குச் சற்று முன்னர், சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட அரசுத் தரப்பு பிரநிதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகள் சிலருடன் தாம் உரையாடியதாகவும்—

கடைசியாகப் பரிமாறப்பட்ட கடிதங்கள் சமாதான முயற்சியின் முடிவுக்கான ஆரம்பமே எனத் தாங்கள் கருதுவதாக அவர்கள் தம்மிடம் கூறியதாகவும்—

ஏ. எவ். பி. செய்தி நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் அமால் ஜெயசிங்க பி. பி. ஸிக்குத் தெரிவித்தார்

சமாதான முயற்சி திசை மாறிப் போவதாக அவர்கள் கூறினர் என்றும் ஜெயசிங்க தெரிவித்தார்.

(உ-க-6-7)

### தப்பிச்சென்ற...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியிருப்பது தமிழக காவல் துறையும், சிறைத்துறையும் சீர்கேடடைந்துள்ளதையே காட்டுகிறது என்றும் —

இதற்கு பொறுப்பேற்று முதலமைச்சர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்றும் மாநில சட்டப் பேரவை எதிர்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (ஒ-3-6-7-14)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

### நஷ்டஈடு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

விரும்பாத அவர், தமக்கு ஏற்பட்ட செலவுக்காக — அடையாளமாக — நாலூறு அமெரிக்க டொலர் நஷ்டஈட்டுத் தொகையையே கோரியிருக்கிறார்.

இது தொடர்பாக சுவீடனில் உள்ள இந்தியத் தூதரகமூடாக இந்திய அரசுக்கு உரிமைக் கோரிக்கைக் கடிதத்தை (Letter of Demand) அனுப்பி வைத்திருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

(உ)

## உள்ளூராட்சி அமைச்சும் தொடங்கொட வசம்

கொழும்பு, மார்ச்.2

கூட்டுறவு, மாகாணசபைகள், சுதேச வைத்தியத்துறை அமைச்சராய் பணி புரிந்து வரும் அமரசிறி தொடாங்கொட, புதிய உள்ளூராட்சி அமைச்சராகவும் நேற்று பதவியேற்றார்.

இந்த மாற்றம் காரணமாக பிரதி அமைச்சர் பதவியிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய உள்ளூராட்சிப் பிரதி அமைச்சராக சந்திரசிறி கஜவீர நியமிக்கப்பட்டுள்ளார்

[க].

## சோனியா அரசியலில் பிரவேசிக்க மாட்டாராம்

கொழும்பு, மார்ச்.2

இந்திய அரசியலில் தாம் பிரவேசிக்கப் போவதில்லை என முன்னாள்பிரதமரராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட பிளவுகளுக்கு முகம் கொடுத்து பிரதமர் பி.வி நரசிம்மராவ் தனக்கென பலமான இடத்தைப் பிடித்து விட்டார் என்றும்—

அவரது கைகளை பலப்படுத்தும் நடவடிக்கையில் தாம் ஈடுபடப்போவதாகவும் —சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

[ஒ-3]

## அழகியற் கலைப் பாடங்கள் செயல் முறைப் பரீட்சை

### அடுத்த செவ்வாய் ஆரம்பம்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ.[சாதாரணதர] பரீட்சையின் அழகியற் கலைப் பாடங்கள் தொடர்பான செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சங்கீதம், நடனம், பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம், மேற்கத்திய சங்கீதம் ஆகிய பாடங்கள் தொடர்பான செயல்முறைப் பரீட்சைகளே நடைபெறவுள்ளன.

இப்பாடங்களுக்குத் தோற்றுவதற்கு சுமார் 86 ஆயிரம் பரீட்சார்த்திகள் தகுதியடைந்துள்ளனர் எனவும், அவர்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இச்செயல்முறைப் பரீட்சைகள் இம்மாதம் 22 ஆம் திகதி வரை நடைபெறும். (ஒ-10)

## தனியார்மயக் கொள்கை அமுலுக்கு ஆணைக்குழு

### ராஜன் ஆசீர்வாதம் தலைவர்

கொழும்பு, மார்ச் 2

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் உத்தேச தனியார் மயப்படுத்தும் கொள்கையை அமுல் செய்வதற்கு முன்னோடியாக பொது நிறுவனங்கள் சீர்திருத்த ஆணைக்குழு ஒன்றை அரசு நியமித்துள்ளது.

இதன் தலைவராக இலங்கை வங்கியின் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆணைக்குழுவுக்கு ஐந்து பேர் உறுப்பினர்கள் முதலில் நியமிக்கப்பட்டுள்ளனர். இன்னும் இரண்டு பேர் பின்னர் நியமிக்கப் படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## பாடசாலைகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியும், விளையாட்டு மைதானம் திறந்து வைத்தல் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1-30 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் திரு. அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயம் 2இன் கல்விப் பணிப்பாளர் திரு. க கந்தசாமி கலந்து கொள்வார். பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் விளையாட்டு மைதானத்தை திறந்து வைப்பார் [இ-14]

★ ★ ★

வலிகாமம் தெற்கு, மார்ச் 2

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. க. செல்வக்குமரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயம் 2 இன் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு கோசி. வேலாயுதமும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சு. இத்தினராசாவும் கலந்து கொள்வர். [14-132]

## 507 ஈழ அகதிகள் தலைமன்னார் புறப்பாடு

சென்னை, மார்ச்.2

507 பேர் கொண்ட இரண்டாவது தொகுதி ஈழத் தமிழ் அகதிகள் நேற்றுக் காலை இராமேஸ்வரத்திலிருந்து தலைமன்னார் நோக்கிப் புறப்பட்டுள்ளது.

பசும் பொன்முத்துராமலிங்கத்தேவர், நெல்லை, கட்டபொம்மன்சிதம்பரனார், காமராஜர், சேலம், இராமநாதபுரம் செங்கை எம். ஜி. ஆர் புரம் ஆகிய மாவட்ட முகாம்களில் தங்கியிருந்த அகதிகளே இவ்வாறு இரண்டாவது தொகுதியினராக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-7)

## விசேட பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம். மார்ச். 2

கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவோருக்காக விசேட பயிற்சி வகுப்புகளும் மாதிரி பரீட்சைகளும் நடத்தப்படவிருக்கின்றன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இப்பயிற்சி வகுப்புக்களின் ஆரம்ப நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலயம் I இற்குப் பொறுப்பான கல்விப் பணிப்பாளர் செல்வி. இ. பெரியதம்பி கலந்து கொள்வார்.

(உ)


யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்

## இலவச விவசாய பயிற்சி நெறிகள்

விவசாய டிப்புளோமா, விவசாய சான்றிதழ் ஆகிய இரு பயிற்சி நெறிகளிற்கு விவசாயத்தை சுய தொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தொழில் வாய்ப்பை தேடிக்கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலரிடம் இருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. விவசாய டிப்புளோமா பயிற்சிநெறி: DIPLOMA IN AGRICULTURE**

இரண்டு வருட கால பயிற்சி நெறி

1.1: போதிக்கப்படும் பாடங்கள்

முதலாம் வருடம்

விவசாயத் தாவரவியல், விவசாய இரசாயனவியல் பயிர் உற்பத்தி -I, பூங்கனியியல் -I, விலங்கு வேளாண்மை I, விவசாய இயந்திரவியல் I, கமப்பொறியியல் I (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்) ஆங்கிலம்.

இரண்டாம் வருடம்

பண்ணை முகாமைத்துவமும் விவசாயப் பொருளியலும் விவசாய விரிவாக்கம், பயிர் உற்பத்தி - II, விலங்கு வேளாண்மை - II, பூங்கனியியல் - II, பயிர்ப் பாதுகாப்பு, விவசாய இயந்திரவியல் - II, கமப்பொறியியல் - II (ஆண்கள்), உணவு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் (பெண்கள்]

1.2: கல்வித் தகைமை

க.பொ.த. [சா/த] பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் தமிழ், விஞ்ஞானம், கணிதம், சமூகக்கல்வி, தொழிநுட்பப் பாடம் ஆகியவற்றில் ஏதாவது 3 பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

க.பொ.த. (உ/த) பரீட்சையில் தாவரவியல், இரசாயனவியல், பௌதிகவியல், புவியியல், விலங்கியல், விவசாயம் ஆகிய பாடங்களில் ஏதாவது 3 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**2. விவசாய சான்றிதழ் பயிற்சி நெறி (CERTIFICATE COURSE)**

ஒரு வருட காலப் பயிற்சி நெறி

2.1: போதிக்கப்படும் பாடங்கள்

விவசாய மூலகத்துவம், பயிரியல். மிருக பரிபாலனம், பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப் பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம்

2.2: கல்வித் தகைமை

க.பொ.த. (சா/த) பரீட்சை அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

3.0: வயதெல்லை

இரு பயிற்சி நெறிகளிற்கும் 01 - 04 - 95 இல் விண்ணப்பதாரிகள் 17 வயதிற்கு குறையாமலும் 27 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

★ பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்பு வேதனமாக நாள் ஒன்றிற்கு ரூபா 20 வீதம் உதவு தொகை வழங்கப்படும்.

★ நூலக வசதிகள் அளிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை சொந்தமாக தயாரித்து தபால் உறையின் இடது மூலையில் கற்கவிரும்பும் பயிற்சி நெறியின் பெயரைக் குறிப்பிட்டு கீழ்க் காணும் முகவரிக்கு 31 - 03 - 1995 இற்கு முன் அனுப்பி வைக்க வேண்டும்.

அதிபா,
யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

(35462)



## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 13 — 03 — 1956



மறைவு: 31 — 01 — 1995

**அமரர் வைத்திலிங்கம் ஜெகதாஸ்**

(கிராம உத்தியோகத்தர் - உரும்பிராய் வடக்கு)

(அரச சேவையில் 10 - 02 - 1985 முதல் 31 - 01 - 1995 வரை)

எங்களுடன் சேவை ஆற்றிவரும் காலகட்டத்தில் இறைவனடி சேர்ந்த ஜெகதாஸ் அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரை இழந்து துயருறும் அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கின்றோம்.

தமிழ் பேசும்
கிராம சேவை அலுவலர் சங்கம்.

[சி-707]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org